மாத இதழ் விலை -/4

லர் 1. இதழ் 6.
ஏப்ரல் — மே 1972.






இந்த இதழிலிருந்து

ஆரம்பமாகிறது

இளங்கீரன் எழுதும்

அன்னை அழைத்தாள்

தொடர்நாவல்

# ஒளி

தெணியான்

தெணியான்

இலங்கையில் கிடைக்கும்

ஆகச் சிறந்த கோப்பி

பிரவுண்சன்

பிரவுண்சன் இன்டஸ்றீஸ்

பிறைஸ் பிளேஸ், கொழும்பு.

வட இலங்கையில் புகழ்பெற்ற
புகைப்படநிலையம்

# பாரத் ஸ்ருடியோ

82/1, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்

☎ 252

# BHARAT STUDIO

PHOTOGRAPHERS

82/1, Kasturiar Road, JAFFNA.

மலர் 1 இதழ் 6

# நல்விருந்து !

''ஒளி'' பிரகாசிக்கத் தொடங்கி எட்டு மாதங்களாகின்றன, இந்த எட்டு மாத காலத்தில் எட்டு இதழ்கள் வெளிவந்திருக்கவேண்டும். ஆனால் இந்த இதழுடன் ஆறு இதழ்களே வெளியாகியிருக்கின்றன. இதையிட்டுப் பலர் கடிதத்திலும் நேரிலும் குறைபட்டுக் கொண்டார்கள். சிலர் குறித்த தினத்தில் எல்லோருடைய கைகளிலும் இருக்கக்கூடிய முறையில் வெளியிடுவதுதான் சஞ்சிகை வளர்ச்சிக்கு சிறந்ததென்று அன்புக் கட்டளையுமிட்டனர்.

நாம் இதை உணராமலில்லை. ஒவ்வொரு மாதமும் பல நூறு ரூபாய்கள் பறந்துவிட்டன. எத்தனை ஆயிரம்தான் செலவழிந்தால் என்ன போட்ட முதல் திரும்பி வந்தால் போதுமென்றிருப்போம். ஆனால் போட்ட முதலே திரும்பி வராத பட்சத்தில் கிரமமாக சஞ்சிகையை வெளியிடுவதில் எத்தனை சிரமங்கள், பிரச்சினைகள், தாமதங்கள் இருக்கும் என்பதைப் பலதும் அறிந்த வாசகர்களாகிய நீங்கள் அறியாததா? யானையைக் கட்டித் தீன் போட்டால் கட்டுபடியாகுமா? ஒரு நிலையை அடையும் வரையில் பத்திரிகைத் தொழிலும் கட்டுபடியாகாததொன்றாகும்.

சஞ்சிகை தாமதமாக வெளிவந்ததற்கு, வெளிவர இருப்பதற்கு நிதி நெருக்கடி மட்டும்தான் காரணமல்ல. அச்சுக் காகிதம், அட்டைக் காகிதம் ஆதியன போதிய அளவு கிடைப்பதே அரிது. அவற்றுக்கு இருக்கும் தட்டுப்பாடும் பிறிதொரு முக்கிய தடையென்பதை உணர்த்த வேண்டியவர்களாயுள்ளோம்.

இவற்றையெல்லாம் எழுதுவதையிட்டு இவர்களென்ன தமது பஞ்சப் பாட்டைப் பாடுகிறார்களே என்று நினைத்துவிடாதீர்கள். ஈழத்து இலக்கிய உலகில் பிரகாசிக்கும் சஞ்சிகையான ''ஒளி'' மங்காதபடி நாம் நல்ல சில ஒழுங்குகளை செய்துள்ளோம். ஆயிரமாயிரம் வாசகர்கள் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்ட ''ஒளி'' இன்னும் பல்லாயிரம் வாசகர்கள் வசமாக வேண்டும் என்ற எண்ணத்துடன் புதுமையை நாடும் எமது அன்பார்ந்த வாசகர்களுக்கு புத்தாண்டு நல்விருந்தாக ஈழத்தின் பிரபல எழுத்தாளரும், நாவலாசிரியருமான இளங்கீரனின் ''அன்னை அழைத்தாள்'' என்னும் உணர்ச்சி ததும்பும் விறுவிறுப்பான புதுமைத் தொடர் நாவலை இந்த இதழில் இருந்து ஆரம்பிக்கிறோம். கருத்தாளமிக்க இந் நாவலுக்குக் கவர்ச்சி மிகு சித்திரங்களை வரையப் பிரபல ஓவியர் மூர்த்தி அவர்கள் சம்மதித்திருப்பது எண்ணற்ற வாசகர்களுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல்தான். சுவையுங்கள் நம்நாட்டு நல்விருந்தை.

# அறிந்ததும் அறியாததும்

"மெய்யன்"

★ **ஞானியின் முடிவு**

பொருளைவிட, பரம் பொருள் பெரிது.

★ **ஒற்றுமை வேற்றுமை**

சமயங்கள் யாவும் ஒரே கடவுளைச் சென்று அடைவதில் ஒற்றுமையானவை; ஆனால் சமய வாதிகள் மட்டும் வேற்றுமையானவர்கள்.

★ **நாம் ஒன்றும் அறியோம்**

எங்கிருந்து வந்தாய்? எங்கே செல்கின்றாய்? ஏன் செல்லுகின்றாய்?

★ **உண்மைப் பெரியோன்**

ஊருராக அலைந்து திரிந்து உன்னை நீ ஒரு பெரிய மனிதனாகச் செய்வதைவிட, ஊரார் தேடி வந்து உன்னை ஒரு பெரிய மனிதனாக்குவது மேல்.

★ **ஒரு உண்மை**

நல்லவர் எவரும் சாவதில்லை. அப்படி அவர்கள் செத்தாலும் உண்மையாகச் சாவதில்லை.

★ **நிலையிற் பிரியேல்**

மட்டி, மடையன், பேதை, மிலேச்சனின் கதைகளைப் படிப்பவர்கள் அவர்களைப் போல் ஆகக்கூடாது.

★ **திறந்த உண்மை**

பெரியவன் என்று வேடம் போடுவதைவிட, ஒரு நாடகத்தில் பெரியவனாக நடிப்பது இலகுவானதல்ல.

★ **கொண்ட கொள்கை**

ஒரு மடையன் ஒரு புத்திசாலியை மடையன் என்று எளிதிற் கூறலாம்; ஆனால் ஒரு புத்திசாலியோ ஒரு மடையனைப் பார்த்துப் புத்திசாலி என்று ஒருபோதும் செல்வதில்லை.

★ **அதிகப் பிரசங்கி**

''சாதி இரண்டொழிய வேறில்லை...'' என்றால் என்ன கருத்து என்றார் ஆசிரியர். இரண்டு சாதிகளும் ஒழிந்து போவதாக என்றான் மாணவன்.

இந்த இதழில் இடம்பெறும் கதைகள், கவிதைகள் ஆகியவற்றில் காணப்படும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே; கட்டுரைகளின் கருத்துக்களுக்கு அவற்றின் ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

# இளங்கீரன் எழுதும்

## தொடர் நாவல்

## முன்னுரை:

பிரபல நாவலாசிரியனான ரவீந்திரனின் ஐந்தாவது நாவல் பெரும் புகழைச் சம்பாதித்ததோடு, வாசகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் உண்டாக்கிவிட்டது. அதில் வரும் பாத்திரங்கள், சம்பவங்கள், உரையாடல்கள் எல்லாம் உள்ளத்தைக் கவர்ந்து உணர்ச்சியைக் கிளறிய போதிலும் பரபரப்புக்குக் காரணம், இந்நாவல் ரவீந்திரனின் சொந்த வாழ்க்கை என்று அடிபட்ட வதந்திதான். ''இது உண்மைதானா?'' என்று கேட்டு நூற்றுக் கணக்கான வாசகர்களிடமிருந்து கடிதங்கள் வந்துகொண்டிருந்தன. இந்த வதந்திகளையும், கடிதங்களையும் கண்ட ரவீந்திரனின் நிலைமை சங்கடமாகிவிட்டது. ''ஓம்'' என்றும் சொல்ல முடியவில்லை. ''இல்லை'' என்றும் சொல்ல முடியவில்லை. பல நாட்கள் இதுபற்றிச் சிந்தித்தான். கடைசியாக தன் நாவல் வெளிவந்த பத்திரிகையில் பின்வருமாறு எழுதினான்.

''இந்நாவல் என் சுயசரிதமோ என்ற சந்தேகத்தையும் பல சர்ச்சைகளையும் பரபரப்பையும் வாசகரிடையே உண்டாக்கிவிட்டதாகத் தெரிகிறது, இதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை,

என்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் இதுவரை எத்தனையோ ரக மனிதர்களைச் சந்தித்துவிட்டேன். இவர்களையும் இவர்களின் வாழ்க்கையையும் பார்த்தபோது ''ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் ஒரு புத்தகந்தான்'' என்று பீட்டி என்ற அறிஞன் சொல்லியிருப்பது உண்மைதான் என்றுதோன்றியது. இவர்களில் சிலருடைய வாழ்க்கைப் புத்தகங்கள் ருசியானவை, விசித்திரமானவை. அனுதாபம் பெறத்தக்கவை. இவற்றை நீங்களும் படித்து ரஸிக்க வேண்டும் என்று விரும்பினேன். திடீரென்று இன்னொரு யோசனையும் உதித்தது. அதாவது, ஒரு வகையில் இவர்கள் பலருடன் என் வாழ்க்கையும் சம்பந்தப்பட்டிருந்ததால் என்னையும் ஒரு பாத்திரமாகச் சிருஷ்டித்து இந்நாவலில் நடமாட விட்டால் சுவையாக இருக்கும் என்ற எண்ணந்தான் அது. இதன்மூலம் இதுவரை பிறருடைய வாழ்க்கைப் புத்தகங்களையும், அவர்களையும் கலைக்கண்கொண்டு பார்த்து விமர்சித்துக் கதைகளாகவும், நாவல்களாகவும் படைத்து வந்த நான் அதே கண்கொண்டு என் வாழ்க்கையையும், என்னையும் விமர்சித்துப் பார்க்க ஒரு சந்தர்ப்பமும் ஏற்படுமல்லவா?

அந்தச் சுவை எப்படி இருக்கும் என்பதையும் உணர்ந்து கொள்ள லாமல்லவா?

இந்த எண்ணம் பிறந்ததும் என் வாழ்க்கையோடு கலந்து நின்றவர்களையும் நிற்பவர்களையும் வைத்துக்கொண்டு உண்மையைக் கற்பனை பண்ணி இதனை எழுதினேன். இந்தப் பிரம்ம வித்தையின் விளைவு தான் இந்நாவல். என் சுயசரிதமோ என்று வாசகர்களின் மத்தியில் எழுந்த சந்தேகம் இவ்வகையில் நியாயமாய் இருக்கலாம். ஆனால் இந்நாவலில் வரும் ரவீந்திரனாகிய நான் யதார்த்தமானவன்தான், அதேசமயம் கற்பனையானவனும் கூட.

எது எப்படி இருந்த போதிலும் இந்நாவலில் எனக்கெனத் தனி முக்கியத்துவம் ஒன்றுமில்லை. ஏனெனில், இதில் வரும் ஏனைய பாத்திரங்களும் நானும்தானே இந்நாவல்?

கடைசியாக

இதில் வரும் பாத்திரங்கள் தம்மைத்தான் சுட்டுகின்றனவோ, இது நம்மைப்பற்றியதுதானோ சிலர் சந்தேகப்பட்டு மூளையைக் குழப்பிக் கொள்ள வேண்டாம். இந்நாவல் வாழ்க்கையின் உண்மையான தத்துவங்களைப் புலப்படுத்துகிறதா என்று சிந்தித்துப் பாருங்கள். அப்படி இருந்தால் அதைக்கண்டு அஞ்சாதீர்கள், திகைக்காதீர்கள். ஆர்வத்தோடு ஜீரணியுங்கள். அதில் லாபமே தவிர, நஷ்டமேதுமில்லை''

இவ்வாறு ரவீந்திரன் எழுதியிருந்ததை வாசகர்கள் படித்ததும் அவர்கள் மேலும் ஆச்சர்யப்பட்டார்கள். இன்னும் அதிகம் பரபரப்பு ஏற்பட்டது. ரவீந்திரனைப் பற்றியும் இந்நாவலைப் பற்றியும் புரிந்தும் புரியாமலும் ஒருவித மயக்கத்திலும் தவித்தனர். எத்தனையோ பேர் அதைத் திரும்பவும் படித்தனர். அதுவரை அந்நாவலைப் படிக்காது அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தவர்களும் இப்போது ஆவலோடு அதைப் படித்தனர் இத்தனைக்கும் காரணமான அந்நாவலின் பெயர்,




''யாத்திரைப் பைத்தியம் ஒரு தனியான வியாதியல்ல. அது அறிவின் தொழில் அனைத்தையும் தொகுக்கும் ஒரு பயங்கரமான நோயின் சின்னமாகும்.''

தத்துவஞானியான எமர்சன் யாத்திரையைப்பற்றி இவ்வாறு கூறியிருப்பதை நான் படிப்பதற்கு முன்பே என்னையும் அறியாமல் இந்நோயின் சின்னம் என்னிடம் தோன்ற ஆரம்பித்துவிட்டது.

''உலகம் பரந்து கிடக்கிறது'' என்று பலரும் அடிக்கடி சொல்வதுண்டல்லவா? அவர்களெல்லாம் உலகைச் சுற்றிப் பார்த்துவிட்டுத்தான் அவ்வாறு சொல்கிறார்களோ என்று நான் நினைப்பதில்லை. உலகத்தைப் பற்றி இவ்வாறு அபிப்பிராயம் சொல்கிறவர்களில் அநேகருக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் பரந்து கிடக்கும் இந்த உலகம் எப்படி இருக்கும் என்ற கேள்வியும், முடிந்தவரை இதைச் சுற்றிப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆசையும் என் உள்ளத்தில் விதையாகிப் புதைந்து வேரோடி, முளைவிட்டு வளர்ந்து செடியாகி, மரமாகிவிட்டிருக்கிறது.

என் கால்கள் ஓர் இடத்தில் தரிக்க மறுக்கின்றன. அழகும் விசித்திரமும் நிறைந்துள்ள இப் பூமித்தாயின் மேனியிலே என் பாதச் சுவடுகள் பதிய வேண்டும் என்ற ஆசைப் பெருவெள்ளம் பெருக்கெடுத்து நிற்கிறது. அவளுடைய அங்கமாக இருக்கும் ஒவ்வொரு தேசத்திலும் என் பாதங்கள் முத்திரையிட்டுச் செல்ல வேண்டும். என்னைப் போன்ற பூமித்தாயின் கோடிக் கணக்கான புதல்வர்கள் அவள் மேனியிலே கட்டிப் புரண்டும், ஏறி இறங்கியும், தவழ்ந்தும் நடத்தும் வாழ்க்கை விளையாட்டை — அந்த வாழ்க்கையின் வேடிக்கை விநோதங்களைக் கண்ணாரக் கண்டு களிக்க வேண்டும், அதன் மூலம் என் பார்வையை விசாலமாக்கிக் கொள்ள வேண்டும்; எரிந்து கொண்டிருக்கும் என் சிந்தனைத் தீக்கு அவற்றை நெய்யாக வார்க்க வேண்டும் என்றெல்லாம் ஆசைப்படுகிறேன். என் நெஞ்சில் பூத்துநிற்கும் இந்த ஆசை நிறைவேறும் நாள் எந்நாளோ? ஒருவேளை என் ஆசை என்னையே ஏமாற்றிவிடுமோ?''

அப்புக்காத்து .சோதிலிங்கத்தின் வீட்டு முன் அறையில் குனிந்த தலை நிமிராமல் தனது டைரியில் மேலே உள்ளதை எழுதிக் கொண்டிருந்த ரவீந்திரனின் மேசையில் திடீரென்று



ஒரு ஃபோட்டோ ஆல்பம் வந்து விழுந்தது. டைரியில் உழுது கொண்டிருந்த பேனாக் கலப்பையை திடீரென்று அப்படியே நிறுத்திவிட்டு ஆத்திரத்துடன் தலையை உயர்த்தி ஜன்னல் வழியாகப் பார்த்தான் அவன். ஒரு வாலைக்குமரி 'கலகல' எனச் சிரித்துக் கொண்டு நிற்பதும், ரஞ்சிதம் கூடத்துக்குள் ஓடுவதும் தெரிந்தது. ரவீந்திரனிடமிருந்து உஷ்ணம் செறிந்த நெடிய மூச்சுப் பறிந்தது. நெற்றியைச் சுளித்துக்கொண்டு, இருந்தவாறே கதிரையை மறுபக்கம் திருப்பி நகர்த்தி அறையின் வாசலை உக்கிரத்தோடு நோக்கினான்.

அறையின் உள்ளே பரபரப்புடன் வந்த ரஞ்சிதம் ரவீந்திரனின் சினம் தெறிக்கும் விழிகளைக் கண்டதும் சட்டென்று நட்டு வைத்த தூணைப்போல் அப்படியே நின்றுவிட்டாள்.

ரவீந்திரனின் கண்கள் வெட்டி விழிக்கவில்லை. இமை கவிழ்க்காமல் ரஞ்சிதத்தையே வெறிக்கப்பார்த்துக் கொண்டிருந்தன.

க்ஷண நேரம் திகைத்து நின்ற ரஞ்சிதம் தனது தாமரை முகத்தில் அரும்பு கட்டியிருந்த வியர்வைத் துளிகளைத் தாவணியால் துடைத்துவிட்டு நீண்ட தனது மை விழிகளைச் சரித்து அவனை அலட்சியமாகப் பார்த்துச் சிரித்தாள். மறுவிநாடி விசுக்கென்று ஒரு துள்ளலில் மேசையருகே சென்று அதில்கிடந்த ஃபோட்டோ ஆல்பத்தை விரைவாக எடுத்துக் கொண்டு திரும்பினாள். இதே சமயம்,



''ஆல்பத்தில் உனக்கேன் அவ்வளவு கோபம்? அதைத் தூக்கி எறிஞ்சுட்டியே? எனக்குத் தெரியாது ஒரு பழுதுமில்லாமே எனக்கு ஆல்பத்தைத் தரவேண்டும்'' என்று உள்ளே தலையை நீட்டியபடி சொல்லிக்கொண்டு நின்றிருந்தாள் அந்த வாலைக்குமரி.

'இந்தா உன் ஆல்பம். பழுதுமில்லை, கிழுதுமில்லை'' என்று சொல்லியவாறு கதவுவரை வந்த ரஞ்சிதம், அதைத் தன் தோழியான புனிதத்திடம் கொடுத்துவிட்டு வெளியே போக ஆயத்தமானாள்.

''ரஞ்சிதம்...!'' அடைத்துத் திறந்த கரகரப்பான குரலில் அழைத்தான் ரவி.

ரஞ்சிதம் கழுத்தைத் திருப்பி அவனைப் பார்த்தாள். அப்போது,

''எனக்கு நேரம் போய்ட்டுது. நான் போறன், நீ உன் அத்தானுடன் கதைத்துக் கொண்டிரு'' என்று சொல்லிவிட்டு ரஞ்சிதத்தின் பதிலைக் கூட எதிர் பார்க்காமல் சரேலென்று அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாள் புனிதம்.

ரஞ்சிதம் அவனைத் திரும்பிப் பார்க்கவுமில்லை. விடை கொடுக்கவுமில்லை. அவள் தனது விழி அம்பால் ரவியிடம் கேள்விக்கணை தொடுத்தவாறு நின்று கொண்டிருந்தாள்.

ரவி சற்று நேரம்வரை அவளைப் பார்த்தபடி மௌனமாக இருந்துவிட்டு ''நான் உனக்குச் சொல்லியிருப்பது நினைவிருக்குதா?'' என்று சிறிது காரமாகக் கேட்டான்.

''ஓ...!'' என்று தலையை ஆட்டியபடி ''எனக்கு நினைவிருக்கிறதே!'' என்று சொல்லிச் சிரித்தாள் ரஞ்சிதம்.

''இல்லை, உனக்கு நினைவிருந்தால்...''

''எனக்கு நல்லாய் நினைவிருக்குது. சொல்லட்டுமா?'' என்று கேட்டு, அதரங்களைக் குவித்தபடி மீண்டும் சிரித்துவிட்டு ''கற்பனைக் கீதத்துடன் சிந்தனை தாலாட்ட அதில் மயங்கி, உறங்கி எழுத்தால் கதைக் கனவைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கும் போது இடையில் வந்து குழப்புவதைப் போன்ற கொடியகாரியம் வேறொன்றுமில்லை'' என்று நீங்கள் சொல்லியிருக்கிறீங்கள். எப்படி? நான் மறக்கேல்லை, இல்லையா?'' என்று கிண்டலான தொனியில் கேட்டாள் ரஞ்சிதம்.

ரவீந்திரனின் முகம் லேசாய் வெடுவெடுத்தது; உள்ளத்தில் ஆத்திரம் கனன்றிருக்க வேண்டும். அவன் உதடுகளைக் கடித்தபடி தலையில் கையை வைத்துக் கொண்டு பார்வையை நிலத்தில் மேயவிட்ட வண்ணம் ''நான் சொல்லியதை ஒருவசனம் விடாமல் நெஞ்சில் அப்படியே பதிய வைத்துக்கொண்டும் இக்கொடிய காரியத்தை இத்துடன் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதாவது தடவை செய்திருக்கிறாய்'' என்றான். இப்போதும் அவன் குரலில் காரம் குறையவில்லை.

ஆனால் ரஞ்சிதத்துக்கு உறைத்ததாய்த் தெரியவில்லை. ''நீங்களும் கணக்காக எண்ணி வைத்திருக்கிறீங்க போலிருக்குதே'' என்று கேலிச் சிரிப்புடன் கேட்டாள்.

''ஓம், எண்ணித்தான் வைத்திருக்கிறேன். எதுக்கும் ஒரு எல்லை காணவேண்டுமல்லவா? இல்லாது போனால் இக்கொடிய காரியத்துக்கு முடிவே இருக்

காது'' என்று குரலில் வெறுப்பு வெடிக்கக் கூறினான்.

''மெய்தான். ஆயிரத்தோடு இதுநிற்க வேண்டுமென்று விரும்புகிறீர்களாக்கும்? அப்ப இன்னும் ஒன்று மிச்சம் இருக்குதே?'' என்றாள் ரஞ்சிதம் குறும்பாக.

''அதையும் இப்பவே செய்து ஆயிரமாக்கிப் பூர்த்திசெய்துவிடு. உனக்கும் அது ஒரு சாதனையாய் இருக்கட்டும்.''

''சரி, ஆனால் நீங்கள் எழுதிக் கொண்டிருக்கேல்லியே, என்னுடன் கதைத்துக் கொண்டல்லவா இருக்கிறீர்கள்?''

ரவிக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ஆனால் ஒரு வார்த்தையும் வாயிலிருந்து பாயவில்லை. காற்றடைத்த ரயரின் விறைப்பைப்போல் கோபமும் மனதை விறைக்கச் செய்து அழுத்தியது. அது வெளிவர முடியாமல் முகத்தோடு மட்டும் தேங்கிக் கண்களைக் கலங்கச் செய்துவிட்டது. அவன் கையை கன்னத்தில் வைத்துக்கொண்டு முகட்டை அண்ணாந்து பார்த்தான்.

அவன் இருந்த நிலை ரஞ்சிதத்துக்கு எந்த விதமான உணர்ச்சிகளை உண்டாக்கியதோ - அவனைச் சற்று இரக்கத்தோடு பார்த்தாள். பிறகு ''நான் ரெம்பவும் கொடுமைக்காரி, இல்லையா அத்தான்'' என்றாள்.

ரவீந்திரன் ஒரு பதிலும் சொல்லவில்லை. அவன் முகட்டையே பார்த்துக்கொண்டிருந்தான்.

ரஞ்சிதம் என்ன நினைத்தாளோ, ''நான் ஒரு மூதேசி, என்னை மன்னித்துவிடுங்கள்'' என்றாள்.

ரவீந்திரன் அப்போதும் மௌனமாகவே இருந்தான். பார்வை முகட்டையே நோக்கிக்கொண்டிருந்தது.

ரஞ்சிதத்துக்கு ஏதோ நெஞ்சை அடைப்பது போலிருந்தது. ''நான் உங்கள் மனசைப் புண்படுத்துகிறேன், அப்படித்தானே?'' அவளுடைய குரல் தழுதழுத்தது.

ரவி வாய் அசைக்கவில்லை. அவன் அப்போதும் முகட்டையே பார்த்தபடி பேசாமலிருந்தான்.

''நீங்கள் என்ன கதை எழுதிக் கொண்டிருந்தீங்களோ... உங்கள் கற்பனையை நான் குழப்பிப் போட்டன், இல்லையா?'' ரஞ்சிதத்தின் விக்கித்துப்போன குரலிலிருந்து இவ்வார்த்தைகள் வெடித்துச் சிதறியபடி வெளியேவந்தன.

ரவி அப்போதும் பதுமையாகத்தான் இருந்தான்.

ரஞ்சிதம் அதற்குப் பிறகு ஒன்றுமே பேசாமல் மெல்ல அசைந்து மேசையின் அருகே சென்றாள், ரவி அப்போதுதான் முகட்டுப் பார்வையை எடுத்துவிட்டு குனிந்து ரஞ்சிதம் நின்றிருந்த இடத்தைப் பார்த்தான். அவளுடைய பாதங்கள் பதிந்திருந்த இடம் வியர்வையால் ஈரமாயிருந்தது.

மேசையின் முன்னால் போய் நின்ற ரஞ்சிதம் ரவீந்திரன் என்ன எழுதிக்கொண்டிருந்தான் என்று பார்த்தாள். ஆனால் அங்கே கதை இல்லை. டைரி விரித்தபடியும், அதன்மேல்



பேஞ சயனித்தபடியும் கிடந்தன. ரஞ்சிதம் விழிகளால் ஒரு தடவை மேய்ந்துவிட்டு சடக்கென்று திரும்பி, ரவீந்திரனைப் பார்த்து ''நீங்கள் கதை எழுதேல்லியா அத்தான்? நல்லவேளை உங்கள் கற்பனையை நான் சிதைக்கேல்லே'' என்று சொல்லிவிட்டு ஆறுதலாக நெடுமூச்செறிந்தாள்.

அதுவரை பூட்டப்பட்டிருந்த ரவீந்திரனின் வாய் அப்போதுதான் திறந்தது. ''நீ விரும்பினாலும் இனிமேல் என் கற்பனையைச் சிதைக்க முடியாது'' என்று சிறிது கடினமான குரலில் கூறினான்.

''ஏன்?''

''ஏனா...? சிருஷ்டிக்கிறவனுக்குத்தான் வருத்தமும் கஷ்டமும் தெரியும். எழுதியதைப் படிப்பது சுகம். ஒரு சிறுகதையை அரை மணித்தியாலத்தில் படித்து முடித்துவிடலாம். ஒரு நாவலை ஒரே மூச்சில் ஒரே நாளில்கூட படித்துவிடலாம். ஆனால் அந்தச் சிருஷ்டிக்கிறதுக்காகப் படும் அவஸ்தையும், சிரமமும் இருக்கிறதே அது உனக்கும் விளங்காது, மற்றவர்களுக்கும் விளங்காது. எல்லாப் புலன்களையும் ஒரே திசையில் ஒரே நோக்கில் லயிக்கவிட்டு பிரம்ம வித்தையான இப்படைப்புத் தொழிலில் மூழ்கியிருக்கும்போது யாராவது வந்து குழப்புவதென்றால்?''

ரவீந்திரன் ஆத்திரத்தோடும், படபடப்போடும் கூறிவிட்டு சரேலென்று எழுந்து மேசையில் கிடந்த சிகரட் பெகட்டை எடுத்து சிகரட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு புகையை மளமளவென்று இழுத்து வெளியே ஊதினான். பிறகு தொடர்ந்து ''அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை என்னால்தான் உணரமுடியும். மற்றவர்களுக்குத் தெரியாது. ஒருவேளை நீ கல்யாணம் செய்து பிள்ளைகள் பெறும்போது உனக்கு உண்டாகும் பிரசவ வேதனை எப்படிப்பட்டதென்று தெரியும். அதைப் போலத்தான் இந்தக் கதை எழுதும் விவகாரம்'' எனப் படபடவென்று வார்த்தைகளை உதிர்த்துவிட்டு திரும்பவும் சிகரட்டைப் புகைத்தான்.

ரஞ்சிதம் சற்றுப் பிரமிப்புடன் கண் இமைக்காமல் ரவீந்திரனையே பார்த்துக்கொண்டு நின்றாள். இதற்குமுன் அவன் எழுதிக் கொண்டிருக்கும்போது ரஞ்சிதம் பலதடவை குறுக்கிட்டிருக்கிறாள். அப்போதெல்லாம் அவன் வேதனைப்படுவதும் ஆத்திரப்படுவதும் அவனுடைய முகத்தில் தெரியும். என்றாலும் ஒன்றும் பேசமாட்டான். ரஞ்சிதமும் அதைக் கடுமையாக எண்ணுவதில்லை, பொருட்படுத்துவதுமில்லை. இலக்கியம் படைப்பது மிகவும் சிரமமானதென்று அவள் இதற்குமுன் சிந்தித்ததுமில்லை. இப்போது ரவி கசப்பு, ஆத்திரம், வேதனை — அத்தனை உணர்ச்சிகளோடும் தன் சிருஷ்டித் தொழிலைக் கூறியதும் ரஞ்சிதத்தின் உள்ளம் கலங்கிவிட்டது அவளுக்கு வார்த்தைகள் வரவில்லை. ரவீந்திரனை நிலைகுத்திப் பார்த்தபடி அப்படியே நின்றுகொண்டிருந்தாள்.

ரவீந்திரன் சிகரட்டை மேசையிலிருந்த ஆஷ்ட்ரேயில் அழுத்தி நசித்துவிட்டு ''நான் இனிமேல் இங்கேயிருந்துகொண்டு எழுதப் போவதில்லை'' என்றான்.

இப்போது ரஞ்சிதத்தின் உள்ளம் மட்டுமல்ல, கண்களும் கலங்கிவிட்டன. முகம் துக்கத்தால் உப்பி ஊதியது. நான் உங்களுக்கு இடைஞ்சலாய் இருக்கிறன். அதனால்தானே?'' என்று

தொண்டை கரகரக்கக் கேட்டாள்.

துயரத்தில் தோய்ந்த குரலைக் கேட்டதும் முகத்தைத் திருப்பி அவளைப் பார்த்தான். ரஞ்சிதத்தின் விழிகளில் கண்ணீர் முட்டி நிற்பதைக் கண்டதும் ரவீந்திரனிடம் பொங்கி நின்ற ஆத்திரம் உடனேயே மறையத் தொடங்கியது. ஆனால் அவன் பதில் கூறாமல் மேசையில் கிடந்த டைரியை எடுத்து ரஞ்சிதத்திடம் கொடுத்துவிட்டு அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தான்.

ரஞ்சிதம் ஆவலோடு அதை வாங்கிப் பரபரப்போடு படித்துவிட்டு ''இதென்ன அத்தான்?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

ரவி தன் நடையை நிறுத்தாமலே ''நெடு நாளாகவே என் உள்ளத்தில் உருண்டு புரண்டு கொண்டிருக்கும், உறுத்திக் கொண்டிருக்கும் ஒரு ஆசையைத்தான் - அதனுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் ஒரு உணர்வைத்தான் அது சொல்லுது'' என்றான். அவனுடைய குரலில் காரமோ, படபடப்போ இப்போது இல்லை.



டைரியில் எழுதப்பட்டிருந்த வசனங்களும் ரவீந்திரன் சொன்ன பதிலும் இலக்கிய பாஷையாக இருந்தாலும் அவற்றின் பொருள் ரஞ்சிதத்துக்கு நன்றாக விளங்கியது. ''இங்கிருந்துகொண்டு எழுதமாட்டேன்'' என்று ரவி சொல்லியதற்குக் காரணம் தானல்ல என்று தெரிந்து கொண்டதும் மனதிலும் கண்ணிலும் ஏற்பட்டிருந்த கலக்கம் லேசாக மறையத் தொடங்கியது. கண்களைத் துடைத்துவிட்டு ''நீங்கள் எழுத மாட்டேன் என்று சொன்னதுக்கு நான்தான் காரணமோ என்று பயந்து போனன். நல்ல வேளை. உங்களுக்கு இப்ப பிரயாணப் பித்தம் வந்துட்டுது. இதுதான் காரணம். அப்படித்தானே?'' என்று புன்னகை சிந்தியபடி கேட்டாள்,

ரவி சட்டென்று திரும்பி ரஞ்சிதத்தை உற்சாகத்துடன் பார்த்தான் ''என்ன சொன்னாய், பிரயாணப் பித்தமா? சரியான வார்த்தை! ஓம், பிரயாணப் பித்தம்தான். பொருளுணர்ந்து என் உணர்ச்சியைப் புரிந்தும் சொன்ன வார்த்தை போலிருக்குது. ஆசை என்று சொல்வதை விட பித்தம் என்று சொல்வதுதான் பொருத்தம். பொருத்தமான வார்த்தை அதுதான்'' என்றான்.

ஒருவிதப் புளகாங்கிதத்துடன் அவன் கூறிய

வார்த்தைகள் ரஞ்சிதத்துக்கு விளங்கியும் விளங்காமலும் இருந்தன. வியப்புடன் அவனைப் பார்த்தாள். ''நீங்கள் என்ன தான் சொல்லுறீங்க என்று எனக்குப் புரியல்லே. ஆனா ஒன்று மட்டும் விளங்குது. நீங்கள் குதிப்பதைப் பார்த்தால் இப்பவே கிளம்பி விடுவீங்க போலிருக்குது'' என்று இதழ் விரித்துச் சிரித்தாள்.

''ஓம். ஆனால் அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ளத் தக்க சக்தி எனக்கு இல்லே. ஆனால் இந்த ஆசையை என்னால் அடக்க முடியேல்லே. திடீரென்று ஒருநாள் இந்நாட்டை விட்டுக் கிளம்பியே விடுவேன். அதுமட்டும் நிச்சயம்''

ரஞ்சிதத்தின் முகம் திடீரென்று லேசாகக் கறுத்து வாடியது. பால்ய பருவத்திலிருந்து ரவீந்திரனுடன் பழகி வாழ்ந்த அவள் இதுவரை அவனைவிட்டு பிரிந்ததேயில்லை. இப்போது அவன் வெளிநாடுகளுக்குப் போக ஆசைப்படுகிறான் என்பதை அறிந்ததும் சோகம் தழுவிய கலவரமும் கவலையும் நெஞ்சில் மூண்டது. விழிக் கோணங்களில் திரும்பவும் கண்ணீர் முட்டியது. ''என்னைப் பிரிந்து போகப் போறீங்கள், அப்படித் தானே?'' என்று அடைத்துத் திறந்த குரலில் கேட்டாள்.

ரவீந்திரன் ஜன்னலருகே வந்து நின்றுகொண்டு வெளியே பார்த்தான். மேற்கே வானத் திரையில் பிரகாசித்துக் கொண்டிருந்த மாலைச் சூரியனின் வர்ணஜாலக் கதிர்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து, குழைந்து, மஞ்சள் வெயிலாகி மங்கையரின் வெள்ளிச் சிரிப்பைப் போன்று ஒளி வீசிக் கொண்டிருந்தன. ரவீந்திரன் ஜன்னல் விளிம்பைப் பிடித்த வண்ணம் முகத்தை அவ்வொளியுடன் தழுவவிட்டுக்

********************

வெங்காயம் சாப்படுவது பல்லுக்கு மிகவும் நல்லது. எல்லா வகையான பல் நோய்க்கும் வெறும் வெங்காயத்தை வாயில் போட்டு மூன்று நிமிஷ நேரம் மென்றுகொண்டிருந்தால், பல்லில் உள்ள நோய்க் கிருமிகளைக் கொன்றுவிடும்.

********************

கொண்டு சிறிதுநேரம் மௌனமாக நின்றான். பிறகு அவளைப் பார்க்காமலே, ''இல்லே உன்னையோ என்னைப் பெற்றெடுத்த இப் பொன்னாட்டையோ நான் நிரந்தரமாகப் பிரிந்து விடுவேனென்று நினைக்காதே. பறவைகள் எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும், எல்லையற்ற வான மண்டலத்தைச் சுற்றினாலும் கடைசியில் தன் கூட்டுக்கு வந்துதான் ஆகவேண்டும். நானும் ஒரு பறவையைப் போல'' என்று சொல்லி நிறுத்தினான்.

ஆனால் ரஞ்சிதத்தின் மனத் தவிப்பு அடங்கவில்லை. பரபரப்பு ஓயவில்லை. ''ஊர் சுற்றப் போகும் எல்லாரும் பறவைகளைப் போல் அல்ல கடலைக்குப் போன பிணத்தைப் போலத் திரும்பி வராதவர்களுமுண்டு. உதாரணத்துக்கு உங்கள் ஐயாவையே எடுத்துக்கொள்ளலாம்'' என்று தொய்ந்துபோன குரலில் சொன்னாள்.

ரவீந்திரன் சரேலென்று திரும்பி அவளைப் பார்த்தபடி ஜன்னலில் சாய்ந்தான். அவனுடைய தந்தையும் இப்படித் தான் சொல்லிக்கொண்டு ஊரைவிட்டுப் போனதாக அவன் கேள்விப்பட்டிருந்தான். ரவீந்திரன் சிறுவனாக இருந்த

பொழுது ஊரைவிட்டுப் போனவர் எத்தனையோ வருஷங்களாகியும் இன்னும் திரும்பவேயில்லை அவனுடைய மனக்கண் முன் தந்தையின் உருவம் மங்கலாகத் தெரிந்தது. கல் விழுந்த தடாகத்தைப்போல அவன் உள்ளமும் கலங்கியது. ஏதோ நினைத்துக் கொண்டவனாய் ''நான் பிணமல்ல உயிருள்ள மனிதன். நான் ஐயா அல்ல – ரவீந்திரன். என் உயிர் நான் பிறந்த இந்த மண்ணிலேயே பிரியவேண்டும். என் உடல் இங்குதான் இந்த நாட்டில்தான் வெந்து சாம்பலாகவேண்டும் என்ற எண்ணமுடையவன்'' என்ருன். இதைச் சொல்லும்போது ஒவ்வொரு வார்த்தையிலும் அழுத்தமும் உணர்ச்சியும் ஏறியிருந்தன.

இறுகி உறைந்திருக்கும் உறுதியைப் பளீரென்று காட்டும் ரவீந்திரனின் இவ்வார்த்தைகள் கவலையால் வெம்பியிருந்த ரஞ்சிதத்தின் மனதில் குளுமையை உண்டாக்கின. ஈரமாயிருந்த அவளுடைய இமைகள் லேசாக மூடித் திறந்தன. வெப்பமான நெடிய மூச்சுப் பறிந்து கரைந்து மறைந்தது. கனத்துப் போயிருந்த இதயம் சடுதியில் லேசானதைப் போலிருந்தது. என்ருலும் உள்ளத்தில் பதிந்திருந்த துயரத்தின் சுவடுகள் காய்ந்து மறையவில்லை. என்றைக்கோ ஒருநாள் ரவீந்திரன் தன்னை விட்டுப் போகவே செய்வான் அந்த ஒருநாளும் விரைவாக வந்துவிடும் என்று அவளுடைய உள்ளத்தின் ஒரு மூலையில் ஒரு குரல் ஒலித்தது.

தொடரும்

ㄇㄇㄇ

வருக! வருக!!

உங்கள்: ★ றேடியோ
★ ரேப்றெக்கோடர்
★ தையல் மெஷின்

முதலியவைகள் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

**ஈரோ எலக்ரோனிக்ஸ்**

448, காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.

**ERO ELECTRONICS**

4'8, K. K. S. ROAD, — JAFFNA.




எஸ். ராஜூ

நாளைக்குப் புதுவருஷம். எனக்கு அழுகைதான் வருகிறது. அதோ குமார் தன் தந்தையுடன் காரிலே செல்கிறான். அவன் பெரிய கடைக்குச் செல்வான், புதுச்சட்டை, சப்பாத்து எல்லாம் வாங்குவான். பள்ளிக்கூடத்துக்கும் அதைப் போட்டுக்கொண்டு வருவான். ஐயா வேண்டித் தந்த புதுச்சட்டை என்று புழுகுவான்.

எனக்கு அழுகைதான் வருகிறது. எனக்கும் ஐயா வீட்டில் இருந்தால் எவ்வளவு நல்லதாய் இருக்கும்! அவர் சைக்கிளிலே சென்று புதுச்சட்டை வேண்டி வருவார். நான் போடுவேன், ஆனால்.., ஐயாதான் பொலீஸ் ஸ்டேசனில் இருக்கிறாரே. பொலீஸ் பிடித்து ஐயாவை அடைச்சு வைச்சிருக்குது ஒரு வருசமாக. நாளைக்கு வருவாராம் நாளையோடை மறியல் முடியுதாம்; அம்மாதான் சொன்னா.

எல்லாம் அந்தக் குமாருடைய அம்மா செய்த வேலைதான். பணக்காரர்கள் எல்லாம் கெட்டவர்கள். அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. கடவுளே! அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்தவுடன் இதயத்தைப் பறித்துவிட்டாயா?

நான் இப்பொழுது மூன்றாம் வகுப்பிற் படித்துக்கொண்டிருக்கிறேன். ஆனாலும் இந்த உலகத்தைப் புரிந்துகொண்டுவிட்டேன். அதிசயமாக இருக்கிறதா? புரிய வைத்துவிட்டார்கள்.

குமாரினுடைய வீடு பெரிய வீடு. அவன் பணக்காரன். நாங்கள் ஏழைகள். மண் வீட்டில் இருக்கிறோம். பள்ளிக்கூடம் விட்டதும் அவனுடைய வீட்டு வழியாகவே வருவேன். அவனுடைய வீட்டு விறாந்தையில் ஒரு சின்ன வீடு வடிவாகக் கட்டப்பட்டிருக்கிறது. நிறநிற ரியூஸ்களால் அவன் அதைச் சோடித்திருக்கிறான். அதுதானும் குமாரும் தங்கையும் அம்மா, ஐயா விளையாட்டு விளையாடுற வீடாம். எனக்கும் அவர்களுடன் சேர்ந்து விளையாட ஆசையாகத்தான்

இருக்கிறது. ஆனால்,... அம்மா அடிப்பாவே.... அங்கு நான் போகக்கூடாதாம். போனால், குமாரின் அம்மா எனக்கு அடிப் பாளாம். அப்படித்தான் என்ன குமாரின் அம்மா கூடாதவளா? போய்த்தான் பார்ப்போமே!

'குமார் நானும் விளையாட வரட்டேடா'' என்றவாறே உள்ளே போனேன். கோயிலிலே விற்கிற சின்னச் சின்னப் பானை, சட்டியெல்லாம் வைத்திருந்தார்கள், சிதம்பரத்தம் பூவை நறுக்கி ஒரு சின்னச் சட்டியிலே போட்டு ஓலை நெட்டிகளால் எரித்துக் கொண்டிருந்தாள் குமாரின் தங்கை சுகந்தி. ''சீ... சனியன் நீ வேண்டாம் போ!'' என்று ஏசினாள் அவள். அவளுடைய முதுகில் அப்படியே ஓங்கிக் குத்த வேண்டும் போலிருக்கிறது எனக்கு! ''இல்லை அவனும் வரட்டும்... அவன் தான் எங்கடை வேலைக்காரனும் என்ன'' என்று தங்கையைச் சமாதானப் படுத்தினான் குமார்.

அவர்களுடைய அம்மா, ஐயா விளையாட்டில் நான் வேலைக்காரனாகச் சேர்ந்து கொள்கிறேன். ''டேய் முத்து இந்தக் காரை ஒருக்காற் துடைத்து விடடா'' என்று கட்டளையிட்டான் குமார். நல்ல வடிவான சின்னக்கார். பளபளத்துக் கொண்டிருந்தது. அவனது ஐயா வேண்டிக் கொடுத்தாராம். அதிலே ஏறி ஓடவேண்டும் போலிருந்தது எனக்கு. 'டேய் குமார் ஒருக்கால் ஓடிப்பாக்கட்டேடா?' என்று கேட்டேன் அவனிடம். 'டேய் மூதேசி...அம்மா ஐயா விளையாட்டிலை இப்பிடியே கதைக்கிறது? நீ வேலைக்காரன், என்னை ஐயா வெண்டெல்லோ கூப்பிட வேணும்' என்றான் அவன்.

'ஐயா இந்தக்காரை ஓடிப் பாக்கட்டா?' என்றேன். 'சரி என்று அனுமதித்தான் அவன் முதலாளி பாணியில். காரினுள் ஏறி அமத்தி உளக்கி ஓடினேன். இன்பத்தின் எல்லையில் இருப்பது போன்ற உணர்வு எனக்கு!

அப்போது குமாரின் அம்மா வந்தாள் சிங்கம் போல, 'இந்தக் கழுதையை ஏன் குமார் சேர்த்து விளையாடுறநீ? என்றவாறே என் இடது கையைத் தூக்கித் 'தொப் என்று கீழே போட்டாள். நான் பயந்து அவளை நிமிர்ந்து பார்த்தேன். 'மளமள வென்று என் முதுகிலே அடித்தாள். நான் அழுதேன்; துடித்தேன், 'இந்தக்கீழ்ச் சாதி நாயளை ஏன் குமார் விருந்தையிலே ஏற விட்டநீ? என்னைப் பிடித்துத் தள்ளிவிட்டாள். நான் படியிலே தடக்குப்பட்டு விழுந்தேன். அப்பொழுது கதிரையிலே படுத்திருந்த பெரிய நாய் பாய்ந்து வந்து என் காலில் கவ்வியது. நான் 'ஓ வெனக் கதறினேன். குமாரின் தங்கை சுகந்தி என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

அழுது கொண்டே வீடு வந்தேன். அம்மாவிடம் சொல்லியழுதேன். அம்மாவுக்குக் கோபம் வந்தது போலும். அதை என் மேலே தான் தீர்த்துக் கொண்டாள். 'ஐயோ... அம்மா அடிக்காதையுங்கோ... அவையின்ர நாயும் கடிச்சுப் போட்டுதம்மா, நாய் கடித்த இடத்திலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அம்மாவுக்கும் கண்கள் கலங்கி விட்டது.

'பொறு அந்தத் தேவடியாளுட்டை இப்ப கேட்டுக் கொண்டு வாறன், என்றவாறே அம்மா வெளியேறினாள். நானும் அம்மா பின்னே ஓடினேன். குமாரின் அம்மாவைக் கண்டபடியெல்லாம் ஏசினாள் அம்மா. கூடாத வார்த்தைகளால் எல்லாம் ஏசின! அவ இப்படித்தான்

ஆத்திரம் வந்தாற் கண்டபடி யெல்லாம் ஏசுவா... நான்தான் இனி வளர்ந்து அவவைத் திருத்த வேணும்.

அம்மா ஏசியது குமாரின் அம்மாவுக்குச் சுட்டுப் போட்டுது. சாதிப் பெயரெல்லாம் சொல்லி எங்களை ஏசினளவள். 'பொறுங்கோ உங்களுக்கு நான் காட்டித்தாறன்' என்று ஏதோ சபதம் செய்தாள். நாங்கள் வந்து விட்டோம்.

எனக்கு மனதிற்குள்ளிருந்து ஏதோ கிண்டியது. சாதியென்ருல் என்ன? அப்படியென்ன எங்களில் ஒட்டியிருக்கிறது? எதற்காக எங்களை இப்படிக் கழித்து வருகிருர்கள்? நாய்களிற் கூடத் தான் சாதிகள் இருக்கின்றனவே... அல்சேசன் நாய், பறை நாய் என்று! ஆனல் அவையெல்லாம் ஒன்ருகச் சேர்ந்து விளையாடுகின்றனவே! மனிதர்களுக்குள்ளே மாத்திரம் இந்தப் பிரிவினையா? ஏனிந்தப் பாகுபாடு?

நான் அம்மாவிடம் கேட்டேன். 'அம்மா! சாதியென்ருல் என்ன?

'நாங்கள் கீழ்ச்சாதி, அவர்கள் உயர்ந்தசாதி.

'யார் சொன்னது?

'அவர்கள் தான் சொல்கிருர்கள்.

'எதற்காக அப்படிச் சொல்கிருர்கள்?

'உனது ஐயா மரத்திலே ஏறிக் கள்ளுச் சீவுவதால்.

'என்ன? அது அவருடைய தொழில் அதுவும் அவர்களுக்காகத்தானே செய்கிருர். அவர்கள் தானே உறிஞ்சி உறிஞ்சிக் குடிக்கிருர்கள். அதனல் அவர்களது சாதி குறைந்து விடவில்லையா?

'குடிப்பதனல் அவர்கள் சாதி குறைந்துவிடவில்லையாம். அதை எடுத்துக்கொடுப்பதனல் மாத்திரம் நாம் சாதியிற் குறைந்தவர்களாம்.

'என்ன? எங்களிடம் எதுவும் வேண்டிக் குடிக்கக்கூடாது. நாங்கள் அவர்கள் வீட்டு விருந்தையில் ஏறக்கூடாது; அவர்களுடன் சேரக் கூடாது என்றெல்லாம் சொல்கிருர்கள். பின்னர் எங்களிடமே வேண்டிக் குடிக்கிருர்களே!

'அது மறைமுகமாகத் தானே... அது தான் உயர்ந்த சாதிக்காரரின் பண்பாடு.

இருளுகின்ற நேரம் போல் எங்கள் வீட்டிற்கு ஒரு ஜீப் வந்தது. பொலீஸ்காரன்கள் தொப்புத் தொப்பென்றிறங்கி வந்தார்கள்.

'அடே... முத்துசாமி

'என்ன ஐயா என்றவாறே ஐயா வெளியே சென்ருர்.

'என்னடா நீங்களெல்லாம் பெரிய ஆக்களோ... என்னடா பெரிய சண்டித்தனம்? என்று ஒருவன் ஐயாவின் நெஞ்சிலே குத்தினன்.

'ஐயோ! அடிக்காதையுங்கோ ஐயா' என்று ஐயா கும்பிடத் தொடங்கினர்.

அந்த மடயங்கள், பொலீஸ்காரரை ஐயா கும்பிட்டுக் கொண்டு நிற்க பிடரியிலையும் நெஞ்சிலையும் குத்தினங்கள்.

அழுதுகொண்டோடிய அம்மாவைப் பிடித்து இழுத்தேன் நான். பயமாகவிருந்தது, அவங்கள் அம்மாவுக்கும் அடித்துப் போட்டால் என்ன செய்வது?

ஐயாவை ஜீப்புக்குள்ளே தள்ளினர்கள். ஒரு மூலையிலே சுருண்டு விழுந்தார் அவர். அம்

மாவும்,' நானும் அழுது குளறத் தொடங்கினேம். ஜீப் சென்று விட்டது.

பின்பு வழக்கு நடந்தது. ஐயாவுக்கு ஒரு வருடம் மறியல் தீர்ந்தது. என்னத்துக்கென்றே எங்களுக்குத் தெரியாது. இது நடந்து இப்பொழுது ஒரு வருடம். ஐயா நாளைக்கு வருவாராம். எனக்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. ஐயா வருவார்; எனக்குப் புதுச்சட்டை வேண்டித் தருவார்: நாளைக்குப் புது வருஷத்துக்கு நான் புதுச் சட்டை போடுவேன்.

இன்று வருடப்பிறப்பு. எல்லோரும் புதுச் சட்டையுடன் போகிறுர்கள். பச்சை, சிவப்பு, மஞ்சல் என்று எவ்வளவு வடிவான சட்டைகள்; நான் நித்திரை முளித்தது முதல் வீட்டு வாசலிலேயே நிற்கிறேன். இன்னும் முகங் கூடக் கழுவவில்லை. ஐயா இப்பொழுது வருவார்.

பசிக்கிறது; சாப்பிடக்கூட மனம் வரவில்லை. புதுச்சட்டை? குமாரும், தங்கையும் நல்ல வடிவான புதுச்சட்டை போட்டுக் கொண்டு போகிறுர்கள். சப்பாத்து வேறு காலுக்கு! கசங்கிப் போன மண்ணிறக் கழிசானுடன் நிற்கிறேன் நான். குமாரின் தங்கை என்னைக் காட்டி ஏதோ கூறுகிறுள். இருவரும் சிரிக்கிறுர்கள். எனக்கு 'ஓ என்றழ வேண்டும் போலிருக்கிறது. கலங்கிய என் கண்களைத் துடைத்துக் கொள்கிறேன்.

அதோ... தூரத்தில் ஐயா வருவது தெரிகிறது... ஆஹா ஐயாவேதான்! ஓடிச் செல்கிறேன் அவிண்டு விழுந்த களிசானைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு! அப்படியே ஐயாவைக் கட்டியணைப்பேன். அவர் என்னைத் தூக்கிச் கொஞ்சுவார். குளித்து விட்டுப் போய்ப் புதுச் சட்டை வேண்டித் தருவார்.

'ஐயா, ஐயா ஆசை தீர அழைத்துக் கொண்டே ஓடுகிறேன். ஐயாவைக் கட்டியணைத்துக் கொள்கிறேன். ஐயா என்னைத் தூக்கவில்லை; கொஞ்சவில்லை; ஏன்? ஏன்?

'சீச்சீ தம்பி என்னிலை முட்டாதை. அங்காலை போ.

இதென்ன இது? ஐயா மாறி விட்டார்! ஒருவேளை அவரும் உயர்ந்தசாதியாகிவிட்டாரோ? ஐயாவைப் பார்த்துக் கொண்டே அவர் பின்னுல் நடந்து செல்கிறேன். தாடியெல்லாம் வளர்ந்து, கண்கள் உள்ளே சென்று, இருமி, இருமி இரத்தமாகக் காறித் துப்புகிறுர். வீட்டுக்கு வந்தார். உள்ளே வரவில்லை. அம்மா ஓடி வந்தா.

'அன்னம் நான் இனி உங்களோடை இருக்கேலாது. எனக்குக் கசம் பிடிச்சிட்டுது, இனிக் கசாஸ்பத்திரிக்குத்தான் போக வேண்டும். முற்றத்து மரத்திலே ஐயா சார்ந்து கொண்டிருக்கிறுர். ஒரு பேணியில் அம்மா கோப்பி கொண்டு வருகிறுள். அதைச் சிரட்டையில் ஊற்றிக் குடிக்கிறுர் ஐயா.

ஐயா? எங்கள் வீட்டாலும் ஒதுக்கப் பட்டு விட்டாரா?

சிவந்து போன அவர் கண்கள் என்னைப் பார்த்தபொழுது நான் விம்மி, விம்மி அழத் தொடங்கினேன்.

# பிளானற் ஒவ் ஆட்ஸ்
# Planet of Arts

LEADING IN ALL KIND OF
COMMERCIAL ART WORKS.

# வைஸ்-வே Wise-Way

எல்லாவித புத்தகங்களும் வாசிக்க
அங்கத்தவர் ஆகுங்கள்.

**24/1,** பெரியகடை, யாழ்ப்பாணம்.
Grand Bazaar, Jaffna.

# ஊமையின் கனவு

மாத்தனை செல்லம்

நான் அந்தக் கிராமத்திற்கு வந்து ஒரு கிழமையாக வேலைகள் அதிகம் காரணமாக ஊரைச் சுற்றிப் பார்க்க முடியாமல் போய் விட்டது. இன்று ஓய்வு கிடைக்கவே கிராமத்தை சுற்றிப் பார்க்கக் கிளம்பினேன்.

உண்மையிலேயே அழகான கிராமம். கண்களுக்குக் குளிர்ச்சி தரும் கவர்ச்சி மிகு காட்சிகள் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தன. பொதுவாக யாழ்நகரின் சந்தடியான சூழ் நிலையிலேயே பழகிவிட்ட எனக்கு இந்தக் கிராமத்தின் அமைதி மனதுக்கு ரம்மியமாக மிகவும் பிடித்திருந்தது. கிராமத்தின் எழில் கொஞ்சும் அழகிலும், அங்கு கிடைக்கும் பரிபூரணமான அமைதியிலும் மனதைப் பறி கொடுத்துத் தான் ஞானிகளும், தபசிகளும் ஒதுக்குப் புறமான கிராமங்களை நாடி வருகிறார்களோ?

ஆசிரிய மாற்றத்தின்போது 'எங்கே ஆளரவமற்ற காட்டுப் பகுதிக்குள் தள்ளி விடுவார்களோ' என்ற அச்சம் இங்கு காலடி வைத்தவுடனேயே பறந்து விட்டது.

கண்கள் காட்சிகளை மேய, மனம் எண்ணங்களோடு சிறகடித்துப் பறக்க, கால்கள் பழகிய இடம் போல் தன் போக்கில் நடந்து கொண்டிருந்தது, ஊரின் கிழக்குப் பகுதிக்கு வந்தவுடன் கால்கள் தாமாகவே நின்றன. அது ஒரு சிறிய தாமரைப் பொய்கை. அழகின் ரகசியமெல்லாம் தன்னகத்தே கொண்ட பொய்கை எழில் கொண்ட மங்கை நாணப் புன்னகை புரிவது போல் அமைதியுடன் கொலு வீற்றுக் கவர்ச்சியாக இருந்தது. எனக்கு இடப் பக்கத்தில் பிள்ளையார் கோவில்; அதன் சுற்று வட்டாரத்தில் தென்னை மரங்களின் நிழல் பிள்ளையாருக்குக் குடை பிடித்திருந்தது. தூரத்தே தெரிந்த பச்சைப் பசேலென கவின் மிகு காட்சியாக விரிந்து கிடந்த வயல்களின் வனப்பில் மனத்தைப் பறி கொடுக்க அங்கேயே உட்கார்ந்து விட்டேன்.

எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தேன் என்று தெரியாது. ''அடடே! சிவராமனு?'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். என் பக்கத்தில் ஒரு முதியவர் நின்று கொண்டிருந்தார்.

அவர் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். எனக்கு அவரை அடையாளம் தெரியவில்லை. 'யார் நீங்கள்?' என்ற கேள்விக் குறியோடு நிமிர்ந்த என்னைப்பார்த்து அவரே சொன்னார்; ''என்னப்பா சிவா? நான் உம்முடைய பீதாம்பரம் மாஸ்டர் தெரியலியே?'' எனக்கு உடனே நினைவு வந்தது. யாழ்ப்பாணத்தில் நான் படித்துக் கொண்டிருக்கும் போது, எங்களது வகுப்புக்கு இவர் தான் கணக்கு மாஸ்டர். யாரை மறந்தாலும், மாணவர்கள் இவரை மறக்க முடியாதபடி கண்டிப்

பாகப் பாடம் நடாத்தியவர். ''ஐயோ பீதாம்பரம் மாஸ்டரா வாருர்?'' என பயந்து வினவும் படி பிரக்தியாதி பெற்றவர். ஆனல் என்னைப் பொறுத்தள விலன்புக்கு அணிகலமானவர். பாடசாலை முடிந்ததும் அவர் வீட்டில் தான் 'டியூசன்.' விடுமுறை நாட்களில் அவர் வீடு தான் தஞ்சம். அவர் குடும்பத்தினருக்கும் என்மேல் ஒரு தனிப்பட்ட பேரன்பு. நான் படிப்பில் முன்னேற எவ்வளவோ அக்கறை எடுத்த அவர், நான் ஜி. சி. ஈ. படிக்கும் போது 'ரிட்டயர்' ஆகிவிட்டார். அதற்குப் பின் கிராமத்திற்குச் சென்றுவிட்ட அவருக்கும் எங்களுக்கும் தொடர்பு விட்டுப் போய் விட்டது. அதற்குப் பின் காலத்தின் மாற்றம் எப்படி அசுர சுழற்சியாகி விட்டது. சென்று விட்ட காலம் அவர் மூப்பில் தன் காலடியைப் பதித்து விட்டுச் சென்றுவிட்ட படியால், நானே திணறி விட்டேன். அடேயப்பா ஆள் எப்படி மாறிவிட்டார்.

''எப்படி சார் நலமா? வீட்டில் எல்லோரும் நலமா?'' என்றேன்.

''ஓம் தம்பி. நீர் எப்படி இங்கு வந்தனீர்? என்ன செய்கிறீர்?'' என்று சரமாரியாகக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

நான் ஆசிரியப் பதவி ஏற்று இங்கு வந்த கதையைக் கூறினேன். எங்களுடைய பேச்சு கடந்த காலத்தைச் சுற்றி வந்தது. பேச்சு எங்கெங்கோ சுற்றி என்னுடைய கல்யாண விசயத்தில் வந்து நின்றது.

அவர் என்ன நினைத்தாரோ சடாரெனக் கேட்டு விட்டார். ''ஓம் தம்பி நீர் இன்னும் மண முடிக்கவில்லையெண்டு சொல்கிறீர். எங்கட கமலிக்கும் பிள்ளை பார்க்கிறேம். நீர் பண்ணிக் கொள்ளலாமே?''

நான் ஒரு கணம் திகைத்து விட்டேன். சும்மா பரிகாசம் பண்ணுகிருரா அல்லது மனந் திறந்து உண்மையைக் கூறுகிருரா! என்று எனக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லை. கமலியைக் கற்பனையில் கண்டேன். கமலி மாஸ்டருடைய மகள். 'மூக்கொழுவி, மூக்கொழுவி' என்று அழைக்கப்படும் சிந்திய மூக்கும், பரட்டைத் தலையும் கொண்டு அசிங்கமான ஒரு எட்டு வயதுச் சிறுமி என் மனத் திரையிற் தோன்றி மறைந்தாள். எனக்குச் சிரிப்பு வந்தது.

எனது மறுப்பை மறைமுகமாகத் தெரிவிக்க எண்ணி ''கிட்டத்துக்குக் கல்யாணம் பண்ண உத்தேசமில்ல சார்.'' என்றேன் அவர் முகத்தைப் பார்த்தபடி.

''ஓ.., நான் உம்மைக் கட்டாயப் படுத்தல்லே!'' என்று கூறிச் சிரித்தார். பின் விடை பெறும்போது, ''தம்பி ஒருமுறை வீட்டால வந்து போம்'' என்று விலாசம் கொடுத்தார். 'சரிங்க சார்' என்று விடை கொடுத்தேன். பின் நானும் கொஞ்ச நேரம் இருந்துவிட்டுக் கிளம்பினேன். வழியில்!

என் கண்களை என்னல் நம்ப முடியவில்லை. உண்மையிலேயே இவ்வளவு அழகான பெண்ணை பட்டணத்தில் கூட நான் பார்த்ததில்லை. பள்ளியில் கூட அழகு என்ற போர்வையில் அலங்கோலமாகத் தான் வருவார்களேயெழிய இவ்வளவு சாதாரண புடவையில் கழுத்தில்கிடந்த ஒரேயொரு சங்கிலியில்கண்டவர் வியக்க ஊர்வசியோ, ரம்பையோ என வந்ததில்லை.

தங்கப் பதுமைபோல் இடுப்பில் குடத்தோடு நடந்து வந்த

*Space Donated by:*

**ORIENT FARM**

HOSPITAL ROAD,
JAFFNA.

அவள் அழகு மனதைக் கவர்ந்தது. கட்டழகுப் பெண்டிரும், கவின் மிகு இயற்கை அழகும் கிராமத்தில் தான் காண முடியுமென்ற கூற்று எவ்வளவுண்மை! என் மனம் என்றுமில்லாத ஆனந்தத்தில், துள்ளிவிளையாடும் கயல் மீனைப்போல் துள்ளிக் குதித்தது.

அன்று முதன் முறையாக ஒரு பெண்ணின் இனிய நினைவுகள் என் மனதைத் தொட்டு, அந்த ஸ்பரிச சுகத்தில் தன்னை மறந்து தவித்தது.

இரவும், அடுத்த பகலும் அவள் நினைவுடனேயே சாப்பிட்டேன்; உறங்கினேன்; பாடசாலைக்குச் சென்றேன். மெல்லிய ரோஜாவின் இதழ்களால் வருடுவது போல் அவளுடைய நினைவுகள் என் இதயத்தை வருடி இன்பானுபவத்தை அளித்துக் கொண்டிருந்தது. அந்த சுகந்தமான நினைவுகளை ஆத்மார்த்தமாக அனுபவிக்கத் துடித்தது மனம். அன்று மாலை அவளைக் காணும் ஒருவித துடிப்பில், நைப்பாசையில் அதே நேரத்தில் குளக்கரைக்குச் சென்றேன். சொல்லிவைத்தது போல் அவளும் துடி இடை ஒடிய குடமேந்தி வந்தாள். முதல் நாளை விட இன்று அவளது அழகு ஒரு படி மேலோங்கிப் பூரண நிலவாக ஜொலித்துக் கொண்டிருந்தது.

ஒரு கிழமை சென்று விட்டது.

என் மனதைத் தொட்ட அவள் நினைவைப்போல், என் நினைவும் அவள் மனதில் அரும்பியிருக்கவேண்டும். எனக்காகவே வருவதுபோல் தினசரி வந்தாள், எங்கள் மனங்களிலே அரும்பு விட்ட நினைவுகள் புன்னகை பூவாக மலர்ந்து மணம் பரப்பியது. இந்த மௌன காதல் நாடகம் எங்களிடையே ஒருகிழமை நடந்தது. முடிவில் நானே துணிவு பெற்று எனது அன்பை விவரித்து அவளுக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தேன். களங்கமற்ற என் அன்பை ஏற்றுக் கொள்ளச் சம்மதமா? எனக் கேட்டிருந்தேன். கடிதம் பெற்றுக் கொண்டவளின் முகம் குங்குமமாகச் சிவந்து ஒளி விட்டதை நான் கண்டேன்.

கடந்த நாட்களில் நான் மாஸ்டர் வீட்டாரைக் கூட மறந்து விட்டேன். அவர் சொல்லிய படி அவர் வீட்டுக்கும் செல்ல முடியவில்லை. அடுத்த நாள் அவள் பதில் கடிதம் எழுதி வந்து கொடுத்தாள்.

அன்பே!

தங்கள் கடிதம் கண்டேன். பூரண சம்மதம்... எனக் குறிப்பிட்டிருந்தாள். என் உள்ளம் இன்பச் சிறகடித்துப் பறந்தது. கடித மூலம் பேசிவிட்டேன்.

# கத்திரிக்கோல் தோன்றிய காலம்



கி. மு. 300 ம் ஆண்டில் ரோமிலும், கௌல் (பிரான்ஸ்) இலும் முதலாவது கத்திரிக்கோல்கள் தோன்றின. இது விஷயத்தில் யாருக்கு முதலிடம் கொடுப்பதென்பது முடியாத காரியமாயினும், அதுவரைக்கும் வேறெங்கும் கத்திரிக்கோல்கள் காணப்படவில்லை. புராதன கத்திரிக்கோல்கள் இன்றைய கத்திரிக்கோல்களைப் போன்றவையன்று. முன்பு, இரண்டு வெட்டும் அலகுகளும் ஓர் ஆணியாலன்றி, உலோகத் தகட்டினாலேயே இணைக்கப்பட்டிருந்தன. நவீன மாதிரிக் கத்திரிக்கோல்கள் கி. பி. 800 ம் ஆண்டில் ஈராக்கில் காணப்பட்டது.

ஆதாரம் : சோவியத்நாடு

---

இனி அவளையே வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டு காலம் முழுவதும் அவள் அழகைப் பருகிக்கொண்டு கதைக்க வேண்டும் என மனம் கற்பனைவானில் வண்ணக் கோலங்களை வரைந்து கொண்டிருந்தது.

**

வேலை காரணமாக அடுத்த கிழமை அவளைச் சந்திக்க முடியவில்லை. மாஸ்டர் வீட்டுக்கும் போக முடியவில்லை.

மூன்றாவது கிழமை ஒருநாள் ஓய்வு கிடைக்கவே மாஸ்டரின் வீட்டுக்குச் சென்று வருவோமென நினைத்துக் கிளம்பினேன்.

''வாங்கோ தம்பி, வாங்கோ. ஏன் கனநாளா வரல்ல? ஐயா தம்பியப்பத்தி சொன்னவர்''

நான் மாஸ்டர் வீட்டுக்குர போனபோது மாஸ்டரின் சம்சாரம் தான் என்னை அப்படி வப்வேற்றார். மாஸ்டர் அப்போது தான் குளித்துவிட்டு ஈர உடம்பைத் துண்டால் துவட்டியபடி வந்தார்.

''வாரும்சி வராமன், நல்ல நேரத்துக்கு வந்தனீர்'' என்று கூறிச் சிரித்தார்.

வரவேற்பு பலமாக இருந்தது. பல விசயங்களைப் பற்றிப் பேசினோம். இடையில் ''தம்பி உம்மிடம் சொன்னேனே கமலியோட கல்யாண விசயமா, அந்தக் கிழமையே அவளுக்கு நல்ல இடமா கெடச்சுப் போச்சுது தம்பி. உம்மகிட்ட வாய் திறந்த நல்ல மூர்த்தம். நேற்றுதான் 'ரெஜிஸ்தர்' முடிஞ்சது. வாற கிழமை கல்யாணம்'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

''ரெம்ப சந்தோஷமய்யா'' என்று என்னுடைய மகிழ்ச்சியைத் தெரியப் படுத்தினேன்.

''புள்ள இங்க வாரும்.வந்து தம்பி காலல விழுந்து கும்பிடு'' என்று உட்பக்கம் குரல் கொடுத்தார். எனக்கு நாணமாக இருந்தது. நானென்ன அவ்வளவு பெரிய மனிதனா? இருந்தும் கமலியை எதிர் பார்த்தேன்.

குனிந்தபடி வந்த கமலி என் அருகில் வந்ததும் நிமிர்ந்து பார்த்தாள். நான் அவளைக் கண்டதும், உடம்பெல்லாம் பதற,

உடலில் மின்சாரம் பாய்ந்ததை உணர்ந்தேன். நான் கண்டுவந்த கனவுகள் கண்ணாடி மாளிகையாக உடைந்து பொடிப்பொடியாவதை உணர்ந்தேன். எனக்குள் ஓர் ஊமைப் போராட்டம். எவளை மூதன் முதலாக என் மனத்தில் ஏற்றிப் போற்றினேனோ, எவளை என் உயிருள்ளவரை என்னவளாக்கி ஆனந்த வாழ்வு வாழவேண்டுமென்று கனவு கண்டேனோ அத்தனையும் தூள். என் கனவுகளைத் தூளாக்கிவிட்டு, மாற்றானின் மனைவியாக ஆசீர்வாதம் பெற முன்னே நிற்கும் என் குளக்கரைக் காதலியை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

ஆண்டவன் சோதனையில் இதுவும் ஒன்றோ? என் உள்ளம் கனன்றது. சுமக்க முடியாத பாரம் என் உடலை அழுத்தியது. பொங்கி வந்த துயருக்கு அணை போட முடியவில்லை. அவளை நோக்கிய அந்தக் கணத்தில் அவள் கண்களில் தோன்றிய கலக்கம்.... நான் எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டேன் காலம் பிந்திய நினைவுகள் சவுக்காலடிப்பதை மனம் உணர்ந்தது. என் முதற் காதலை ஊமை கண்ட கனவாகிவிட்டது. அவள் இப்பொழுது மாற்றான் மனைவி. அவளை நினைக்கக்கூட எனக்கு உரிமையில்லை. அவள் மேல் கொண்ட காதலைஊமையின் கனவாக நினைத்து மனதுக்குள் போட்டுமருகவேண்டியதுதான். நான் அவளை ஆசீர்வதித்தேன். 'விருட்'டென்றுள்ளே சென்றுவிட்டாள். அப்படிச் செல்லும் போது தெறித்த ஒரு துளி கண்ணீர் என் பாதங்களின் மேல் விழுந்தது.

ரணமாகிக்கிடந்த உள்ளத்தோடு கிளம்பினேன். ''கல்யாணத்துக்கு கட்டாயம் வாங்கோ தம்பி'' என்ற அந்த அம்மா, மாஸ்டர் இருவரின் குரலும் வெளியே வந்த என் உள்ளத்தில் கூரம்புபோல் தைத்தது.

★★


நியூ டிசைன் ஜுவல்லர்ஸ்

68, கன்னாதிட்டி, — யாழ்ப்பாணம்.



நவீன வேலைப்பாடுள்ள

தங்கப்பவுண் நகைகள்

விரும்பிய டிசைன்களில்

உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.



New Design Jewellers

68, KANNATHIDDY, — JAFFNA.

# சிகரெட், சுருட்டு, சிகரெட், சுருட்டு, சிகரெட்

என்ன லாவகமாக புகை பிடிக்கிறுள் என்று வியக்காதீர்கள். அபாயமற்ற செயற்கைச் சிகரெட்டுகளைக் கண்டு பிடித்து விட்டார்கள் என்ற இறுமாப்புத்தான் பளிச்சிடுகிறது.



✻✻

இயற்கைப் புகையிலை போலவே சுவையும், மணமும், காரமும் தரும் இந்த செயற்கைச் சிகரெட்டுகளை நான்கு ஆண்டு ஆராய்ச்சியின் பின் பிரிட்டனில் இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ரீஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

✻✻

கடந்த 14 வருட காலத்துள் இஸ்ரேலியப் பெண் புகை பிடிப்பாளரின் தொகை அதிகரித்துள்ளது. ஆண் புகை பிடிப்பாளரின் தொகை நிலையாக இருந்து வருவதுடன், கால்வாசிப் பெண் சனத் தொகையினர் புகை பிடிப்பதில் ஈடுபட்டு வருவதாகவும் அண்மையில் வெளிவந்த புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன.

✻✻

மேலை நாடுகளில் சிகரெட் புகைப்பது ஆண், பெண் இருபாலாருக்குமே சகஜமான பழக்கமாக இருந்து வந்த போதிலும் பெண்கள் ஏனே சில ஆண்களைப் போல் சுருட்டுக்கள் புகைப்பதில்லை. இதிலும் நாங்கள் ஆண்களுக்குச் சமமானவர்கள் என்று நிரூபிக்கத்தானே என்னவோ, ஹாலிவுட் நட்சத்திர நடிகைகளில் சிலர் சுருட்டு புகைக்கும் பழக்கத்தைக் கடைப் பிடித்து வருகின்றனர். சூசன் ஹாம்ப்ஷயர், மோய்ரா லிஸ்டர், ஷிர்லி மக்ளின், டயான் சிலெண்டோ, ஜெரால்டின் சாப்ளின் ஆகிய சில நடிகைகள் பொது இடங்களிலும் சுருட்டுக்களை விரும்பிப் புகைக்கின்றனர். இன்றைய அமெரிக்காவில் ஆயிரமாயிரம் பெண்கள் சிகரெட் புகைப்பதை விட்டு சுருட்டு புகைப்பவர்களாக மாறி வருகிறுர்கள்.

✻✻

சயனைட் என்ற ஒருவகை நச்சு வாயு சிகரெட்டில் மறைந்திருக்கிறது. அது உடலிலுள்ள விட்டமின் பி. 12 உயிர்ச்சத்தை உறிஞ்சி விடுகிறது என லண்டனிலுள்ள பிரபல வைத்திய நிபுணர்களான டாக்டர் ஜோன் மக்கலி, ஜோன் அன்ட்ரூஸ் என்பவர்கள் தெரிவிக்கிறுர்கள்.

✻✻

புகை பிடிப்பதால் கல்லீரலிலும், சுவாசப் பையிலும் புற்றுநோய் ஏற்படுவது நிச்சயம் என்று பிரிட்டிஷ் வைத்திய சஞ்சிகையில் திட்டவட்டமாக எழுதப் பட்டுள்ளது.

# தியாக தீபம்



களுவாஞ்சிகுடி, பரமானந்தன்

கலை வளமும், தொழில் வளமும், கவிவளமும் செறிந்து கந்தர்வ லோகமாக மிளிருகின்றது களுவாஞ்சி நகர். அதனூடே எத்தனை சிக்கல்கள் பரந்து நகரின் சிறப்பைக் குறைக்கின்றன. அத் திருநகரின் ஒரு ஏக சத்திரமான இடம் கந்தர்வ மடம். மடத்தைச் சுற்றிப் பல மக்கள் கூட்டம் செறிந்துள்ளது. அதனுள்ளே சீரும் சிறப்புமாக மிளிருவது நாகராசாவின் வீடுஒன்றுதான். பலகாலம் ஏழ்மையிலே பிறந்து ஏழ்மையிலே வளர்ந்து முயற்சி என்ற தழையின் கொம்பிலே முன்னேற்றம் கண்டவர் நாகராசா.

முயற்சியின் விளைவேயவரை இன்று நாலுபேர் மதிக்க வாழ வைக்கின்றது. அவருக்கு எத்தனை தடங்கல் இருந்தாலும், பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாகத் திகழ்ந்தாள் அவர் மனையாள் கனகம். தங்கமான குணம்; பரந்த தயாள மனப்பான்மை, இவைகளே அவர்களின் மதிப்புக்குக் காரணம் எனலாம். இருந்தும் ஒரேயொரு மகனையும் அவர் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்துப் பாடுபட்டுப் படிப்பித்தார். தந்தை சொல்லைத் தாரக மந்திரமாக ஏற்று நடந்தவன் பாஸ்கர். தன்னலம் கருதாது பொதுநலம் புரியும் சீரிய தொண்டும், உயிர்களின் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பும் அவனை இன்றுவரை நல்லவனாகவே வாழச் செய்தன...

பாடுபட்டுப் படித்த படிப்பின் எல்லையினைத் தாண்டுகின்ற நிலையில், அவன் மன எண்ணங்களும், சூழ் நிலைகளும் உருமாறி உழலத் தொடங்கின. காலத்தின் கோலம் பாஸ்கரை மாற்றியதில் வியப்பில்லையே! பாஸ்கர் கடந்த ஒரு வருடத்துள்ளே எஸ். எஸ். சி. பரீட்சையினைத் தேறிப் பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் பயின்று வருகின்றான். 'முயற்சி' என்ற கொம்பின் விளைவே அவனையும் அவன் குடும்பத்தையும் இன்று இந் நிலைக்குக் கொண்டு வந்தன. பாடுபட்டுப் படித்து, படிப்பின் உச்சியினைத் தாண்டுகின்ற நிலையில்...

பருவம் மாறியது; காலக் கண்ணாடி ஒருதரம் ஆடி அசைந்தது. அவன் வாழ்விலும் இன்றுவரை காணாத மலர்ச்சியொன்று இழையோடத் தொடங்கியது. அவன் படித்த வகுப்பில்தான் சகோதரி சுமதியும் பயின்று வந்தாள். காலத்தின் கோலம் அவனை மாற்றினாலும் கலை என்ற உணர்ச்சி அவனைப் பற்றிப் பிடித்திருந்தது.

கலைப்பித்தனாகவே பாஸ்கர் உதயமானான். கல்லூரியிலே சகோதரத்துவம் வளர்ந்தது. அது கால மாற்றத்தின் சூழலில் அன்பாக வளர்ந்து, ஆசையாக மணம் வீசி காதலாக முகிழ்ந்து விட்டதெனலாம். பெயருக்கேற்

பச் சுமதி சுமதியாகவே வாழ்ந் தாள். தற்கால உலகியல் அவ ளைச் சிறிது மாற்றியதே தவிர அவளின் குணங்களும், பண்புக ளும் நல்லனவாகவே மிளிர்ந் தன.

உலகம் என்ற பூஞ்சோலை யில் உலவும் மலர்கள்தான் எத் தனை! மணம் பரப்பி வீசும் மலர் களாக எல்லாம் மலரமுடியுமா? மலராத மலர்களும், மலர்ந்தும் வாடாத மலர்களும், மலர இய லாத மலர்களும் எத்தனை! கர்ம தேவன் படைப்பினிலே நாம் காண்கின்ற பொருள்களே ஒரு விதத் தோற்றந்தானே. அந்த வகையில் சுமதியின் சில பண்பு கள் அவனைக் கவரத் தொடங் கியதில் வியப்பும் இல்லை.

அவனது பரந்த உள்ளமும், தியாக சீலமும், தயாளகுண மும், கலைப் பித்தும் அவனை அவளிடத்து ஆட்படுத்தியதில் தப்புமில்லை. 'கல்லூரிக் காதல் படலைவரை' என்ற மொழியை அறியமுடியாத உள்ளம் இல்லா தவனு பாஸ்கர். அவனும் உண ர்ந்துதான் அவளை நேசித்தான். பண்பினை அறிந்துதான் அவளும் நேசித்தாள். ''ஞாயும் யாயும் யாராகியரோ'' என்ற பாடல் அவர்களைப் பொறுத்தவரையில் உண்மையாகவே இருந்தது.

கல்லூரிக் காதல் கனிந்து பல இடங்களிலும் பரவச் சந் தர்ப்பமும், சூழ் நிலைகளும், இயற்கைக் காட்சிகளும் வழி வகுத்தன. இதுவரை இந்த விட யம் பெற்றோர்களின் செவிக்கு எட்டவில்லை. ஆனால்ஊர் வாயை மூட... உலைதேவையில்லையே... கா...த...ல் என்ற பெயரளவில் பேச்சளவில், கதையளவிலிருந் ததே தவிர தப்பான வழியில் செல்லச் சந்தர்ப்பம் இடம ளித்த போதிலும் 'மனம்' என் னும் பேய் அவனை விரட்டிப் பய முறுத்தியது.

சுமதி அன்று தனிமையிலே பாஸ்கரைக் கல்லூரியில் சந்தித் தாள். ஆனால் அவள் மனத்தின் இதயக் கனவுகளை, உணர்ச்சிப் பிரதிபலிப்பை வெளியிட முயன் றும் வசதி கிடைக்கவில்லை. ஆனால் அன்றொரு நாள் சந்தர்ப் பம் பிணைக்க வைக்குமாறு சதி செய்து விட்டது. அன்று சுமதி மனந் திறந்து வெளியிட்டாள் எண்ணங்களை. பாஸ்கர் காத லைப் பற்றியே விமர்சித்தான். அம்பிகாபதி-அமராவதி, லைலா-மஜ்னு, ரோமியோ - யூலியட், ஜாஜகான்-சலீம், துஷ்யந்தன்-சகுந்தலை, அவன் பேச்சினிலே கலந்து விளையாடினர். சுமதி, காதல் என்பது ஒரு பூங்கொடி யாகும். அதனைக் கசக்கி எறியும் புஸ்பமாலையாக நினைக்கக் கூடாது. சுமதி கா...த...ல் இன்று கடைச்சரக்காக மதிக்கப்படுகின்றது. சுமதி காவியக் காதலர்களின் நலனை எண்ணிப்பார். நான் எங்கோ பிறந்தவன். நீ எங்கோ பிறந்த வள். நம் இருவரிடையே அன்பு, பண்புஎன்ற பாசப் பிணர்ச்சி பரந்தாடுகின்றது. நான் உன்னை நேசிக்கிறேன்- நீ என் அன்புக் காக என்னை நேசிக்கிறாய். இதில் ஏதும் தப்பில்லையே. அவர்களை அறியாது பேச்சுக்கள் கலந்து கலந்து உறவாடின. ஆனால் கால நேரம் இடங் கொடுக்குமா? பக லவனும் தன் பரிமாண ஒளியை மங்க வைத்து மலையடியில் துயில் கொள்ளும் வேளை... அத்துடன் இருவரும் விடை பெற்றுச் சென் றனர்.

பல்கலைக் கழகப் பரீட்சை யும் நெருங்கியது. காலத்தை விரயமாக்காது படிப்பினிலேசுடு பட்டு வந்தான் பாஸ்கர். பாஸ் கருக்கு எவ்விதத்தும் சளைத்தவ ளல்ல என்ற உண்மையைக் காட் டுமாறு சுமதியும் பரீட்சைக்காக விழுந்து, விழுந்து படித்தாள் பலன்... இதற்கிடையில் சுமதி

எழுத்தாளர்களில் மூன்று ரகத்தினர் உண்டு. வரம்பைக் கட்டிக் காக்க விரும்பும் எழுத்தாளர். வரம்பை மீறி எழுத விரும்பும் எழுத்தாளர். வரம்பை அழித்து எழுதும் எழுத்தாளர். இவர்களில் நான் இறுதியாகக் கூறிய ரக எழுத்தாளர்களையே விரும்புகின்றேன்.

கே. டானியல்

---

யின் பெற்றோர் தம் அந்தஸ்துக்கும், கௌரவத்திற்கும் ஏற்க அவளுக்கு முறையான அத்தை மகனான பாலுவை மணஞ்செய்விக்க விரும்பித் திகதியும் குறித்து விட்டுச் சுமதியிடம் கூறினர். இதுவரை தன் பெற்றோர்களின் சொல்லையே தட்டியறியாத சுமதி இதில் தவறுவாளா? ஆனால் பேச்சினைக் கேட்டபோது அவள் உள்ளம் குமுறும் எரிமலையாக, கொந்தளிக்கும் கடலாக, பயங்கரச் சூறாவளியாக மாறியது.

அவளின் கடந்த கால எண்ண மலர்கள் அவள் கண் முன்னே ஒரு கணம் நிழலாடி மறைந்தன. பாஸ்கரும், தானும் கதைப்பதாக அவள் மனத்திரை கற்பனை இழையோட்டத்தினை உண்டு பண்ணியது. அதற்காக என் காதலை, தூய பாசப்பிணைவை உதறித் தள்ளுவதா? அவளின் இதயத் தராசில் பாஸ்கரின் நினைவும், பெற்றோர் நிகழ்ச்சியும் மாறிமாறி வந்தன. எனினும் அது முற்றும் எதிர்பாரா வகையில் பெற்றோர் பக்கமே கதிக்க ஆரம்பித்தது. நேற்று வந்தான்... இன்று இருப்பான்... நாளை போவான்... அவனை நம்பி... சீச்சீ பேதலித்த மனமே அதற்காகக் காலம் எல்லாம் காத்து வளர்த்த பெற்றோரினைக் கை விடுவதா? மனத்திரை சலனம் இன்றித் தெளிந்தது. பாஸ்கருக்குத் தோல்வி.

அன்று வந்த அவளின் வதனம் வாட்டமுற்று விளங்கியது. அகத்தின் உணர்ச்சிகள் முகத்தில் தெரிந்தன. அன்று இவ்விடயத்தை அவள் பாஸ்கரிடம் வெளியிட்டபோது அவன் மனம் புண்ணில் எறிந்த ஈட்டியைப் போன்று துவண்டது. சுமதி! இதற்காகவா காலம் எல்லாம் உன் எழில்பாடிக் கவிதை புனைந்தேன்; கதை வரைந்தேன்; வெற்றி பெற்றேன். அவை யாவற்றையும் இன்று கல்லில் எறிந்த மட்கலம் ஆக்கிவிட்டாயே என்று கதறினான். உணர்ச்சிகள் ஒவ்வொன்றும் நினைவுப் புயலை வெளிக்காட்டி நின்றன. ஆனால் அவள் விழிகள் அருவியாக நீரைச் சொரிந்து நின்றன. ''பாஸ்கர்! என் பாச உணர்ச்சிகள் என்னைவிட்டு என்றும் அகலாது. பாஸ்கர் நம் உறவுமுறையைச் சமூகக் கண்ணாடியும், 'முறை' என்ற கோரப்பிடியும் இழுத்துப் பிடிக்கின்றனவே பாஸ்கர்.

கண்கள் நீரைச் சொரிந்தன. இருவிநாடி இனம் புரியாத அமைதி: நீண்ட பெருமூச்சு. பாஸ்கர்! நீங்கள் என்னிடம் வைத்த அன்பு தூய்மையானதானால், களங்கமற்றதானால் எனக்காக நீங்கள் நம் காதலைத் தியாகம் செய்வேன் என்று ஒரு வார்த்தை கூறுங்கள் பாஸ்கர். அப்போதான் என்னுள்ளம் சாந்தியடையும் பாஸ்கர். இச்சொல் அவன் காதில் நாராசம்போன்று தொனித்தது. அவளே கேட்டாள். இறுதியாக என் மீது கொண்ட அன்பின் சாட்சியாக நீங்கள் இத் தியாகம் செய்யா விட்டால் இன்னும்இரண்டொரு நாளில் என் பிரேதத்தையாவது அடக்கம் பண்ணும் உரிமையை நீங்கள் ஏற்றுச் செய்தல்

வேண்டும். வருகிறேன் என்று கூறியவள் சென்றே விட்டாள்.

கால ஏடு புரண்டது. பருவ இதழ் விரிந்தது. சிந்தனைக்குருவி சிறகடித்தது. பாஸ்கரின் மனமும் மாறியது. அசையாத நம் பிக்கையுடன் அவன் எண்ணங்களையும், செயலையும் பேனுவும், காகிதமும் காட்டின.

அன்பான சுமதிக்கு,

பாஸ்கரின் உளம் கனிந்த நன்றி. அன்று நீ கூறியதை நான் சிந்தித்தேன் சுமதி! திடமான முடிவுக்கு வந்துள்ளேன். நான் என் காதலைத் தியாகம் செய்கின்றேன். இது சத்தியம். நீண்ட நாளாக நான் எதையாவது தியாகம் செய்ய வேண்டுமென்று ஆவலாக இருந்தேன். அது இப்படி முடியுமென நான் கனவில் கூட நினைக்கவில்லை. ஆயினும் இதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

''வாழ்வில் என்றுவது ஒரு மலர்தான் மலரமுடியும். மலர்ந்த மலர் வாடியபின் வாழ்வே கிடையாது என வெறுப்பவர் பலபேர். அது கயமைத் தனம். நாம் யாவரும் வாழப் பிறந்தவர்கள். இடையில் பருவக் கிளர்ச்சி மனிதனைப் பயனின்றி ஆட்டும். நாம் ஆடக்கூடாது. ஆடினால் கோழை. எல்லோரும் காதலிக்கின்றார்கள்; மணம் முடிக்கின்றார்கள் இல்லையே? அவ் விதத்தில் நாமும் அப்படியே... மடுமலையை நாட முடியாது. ஆனால் நான்... நான் காதலைத் தியாகம் செய்து விட்டு உன்னை என் மனத்திரையில் வைத்திருப்பது குற்றமென நீ உணரலாம். ஆனால் நான் எங்கிருப்பினும் உன் நினைவினால் சில ஓவியங்கள், காவியங்கள் படைத்துச் சாந்தமாயிருப்பேன். வருகிறேன்.

இ...வ...ண்
பா...ஸ்...க..ர்

''மிகச் சிறந்த நூல்களை முதலில் படியுங்கள். அல்லது அவற்றைப் படிக்கும் வாய்ப்பே இல்லாமற் போய்விடும்''

-ஹென்றி டேவிட் தோரோ.

மடலை மறுநாளே கையிற் சேர்த்துவிடைபெற முயன்றான். ஆனால் அவளின் சில புத்திமதிகள் அவன் வாழ்வையே மாற்றியமைத்தன. பாஸ்கர்! நீங்கள் காதலைத் தியாகம் செய்தால், ''தியாக தீபம்'' என்ற பட்டம் பெறமுடியாது. எனக்காக நீங்கள் உங்கள் நாட்டுப் பிரயாணத்தை விட்டுக் கல்லூரியில் படித்து முன்னேற வேண்டும். அப்போதுதான் என் உள்ளம் சாந்தி பெறும்: எனக்காக நீங்கள் செய்யத்தான் வேண்டும் என்று மன்றாடினாள்.

மறு வாரம் பாலு — சுமதி திருமணத்தை நிறைவேற்றி விட்டு வெளியில் வந்ததுதான்; அவன் மனம் அவளின் தூய பண்பினையும், ''நீங்கள் என்றும் தியாகச் செம்மலாக வாழுங்கள்'' என்ற வாய்மொழியையும் நினைந்து, நினைந்து இன்பலாகிரியில் மூழ்கியது.

''பாஸ்கர்! உங்களைப் போன்ற தியாகிகள் உலகில் பிறக்க வேண்டும். நீங்கள் என்றும் ''தியாக தீபம்'' ஆகவே வாழுங்கள் என்ற வாய்மொழியும், ஆசீர்வாதமும் அவனை இன்றுவரை மனிதனாக நடமாட வைத்து இன்று, ஒரு பட்டதாரியாகவும் மாற்றி விட்டது. அவள் இன்னும் அந்த (Photo) நிழலுக்குள் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறாளா?

★

# பிரேம கீதம்

## 2

இ. நாகராஜன்

ஆண்டவன் வீதி வலம் வருகின்ற மணித்தேர் தங்கும் முட்டியின் கீழ் எந்த மனிதனுடைய தொல்லையுமின்றி முடங்கிப் படுத்திருந்த சொறிநாய் குரைத்த சத்தத்தைக் கேட்டுக் கந்தசாமி சிறிது திடுக்கிட்டானாயினும் அச்சமடையவில்லை. மெதுவாக நடந்து கோவில் திண்ணையை மருவி 'அப்பனே, ஆண்டவனே' என்று சொல்லியபடி அதில் ஏறினான்.

நேரம் எட்டு மணியைத் தான் அடுத்திருந்தது. ஆனால் நிசியை நினைவூட்டும் அமைதி அங்கே குடி கொண்டிருந்தது. இந்த வேளையில் யாழ்ப்பாணப் பட்டினத்தின் முக்கியமான வீதிகளில் சந்தடிக்குக் குறைவிருக்காது. எங்காவது சந்தியிலோ அல்லது சனக் கூட்டமுள்ள இடத்திலோ நண்பர்களுடன் நின்று கொண்டு அரட்டையடிப்பவன் கந்தசாமி. ஆனால் இந்த இடம் புதிது. இதற்கு முன்னர் எப்போதாவது அவன் வந்தது கிடையாது.

பாழ்பட்டுப் போன பஸ்வண்டி செய்த சதியினால் இந்தவிதமான நிலை ஏற்பட்டுள்ளது. பஸ் நிலையத்தில் நின்று புறப்பட்டது கால தாமதமானாலும், பொழுது சரியுமுன்னர் அவ்விடத்தை அடையலாம் என்ற நம்பிக்கை வைத்திருந்தான். அந் நம்பிக்கையின்றேல் நிச்சயம் இங்கு புறப்படாமலே வீட்டுக்குத் திரும்பியிருக்கலாம். பஸ்ஸில் புறப்பட்டு வந்து விட்டான். குறித்த இடத்தைக் குறித்த நேரத்தில் அடையமுடியாத நெருக்கடிக்குள்ளாகி விட்டான்.

எப்போதுமே நடந்துபோனவற்றைப்பற்றி அடிக்கடி நெட்டுரு பண்ணி மனத்தைக் குழப்பத் தெரியாதவன் கந்தசாமி. காலிலிருந்த செருப்புகளைக் களைந்துவிட்டு கோவிற் திண்ணையில் சாவகாசமாகக் குந்திக் கொண்டான்.

கோபுரவாசல் பூட்டப் பட்டிருந்தது. வளர்நிலவின் வளர்ச்சி முடிய இருள் கருங்கலாகக் கறுத்து விட்டது. அந்தக் கருமையின் நடுவே பிரமாண்டமான இராட்சதன் இட்ட நெற்றிப் பொட்டுப் போல் கோவிலுக்கு முன்னே இருக்கும் வெளியில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கின் சன்னஒளி விழும் திண்ணையிலேயே அவன் குந்தியிருக்கிறான்.

எந்தவிதமான மனிதனும் அக் கோவில் திக்கை நோக்கி வரவில்லை. இருளோ எங்கும் வியாபித்துள்ளது. அந்த கந்தையா என்ற நபரை எப்படிச் சந்திப்பது?

இதற்கு விடைகாண அவனால் முடியவில்லை. சரி, விடிந்த

ன் பார்ப்போம் என்றபடி திண்ணையில் சரியலாமென்று நினைத்துக் கொண்டவன் சரிந்து கண்ணை மூடிக் கொண்டான். பசி அவன் வயிற்றைக் கிண்டத் தொடங்கியது.

மதியம் பன்னிரண்டு மணிக்கு தாயார் கொடுத்த சாப்பாடு சீரணமாகி விட்டது. இதுவரை காலமும் எதை வேண்டுமானாலும் கந்தசாமி துறந்து விடத் தயாராக இருந்தான். ஆனால், சாப்பாட்டைத் துறக்கும் பயிற்சியை அவன் பெற்றிருக்கவில்லை. வயிற்றுக்கு மட்டும் எப்போதும் வஞ்சகம் செய்யும் பழக்கம் அவனுக்கிருக்கவில்லை.

சினிமா முதலாம் காட்சிக்கு அடிக்கடி செல்லும் வழக்கமுடையவன். குறிப்பிட்ட சினிமா நட்சத்திரம் ஒருவரின் அனுதாபத்திற்குரிய விசிறியாக அவனில்லை. ஆனாலும் படத்துக்கென்று புறப்பட்டால் பார்க்காமல் திரும்பமாட்டான். கியூவில் முண்டியடித்துக்கொண்டு அவன் முன்னேறிச் சென்றாலும் அனுமதிச் சீட்டுக் கிடைக்காத நிலை ஏற்பட்டதுண்டு. அப்படியான வேளையில் அவன் இரண்டாவது ஆட்டத்தைப் பார்த்துவிட்டே திரும்புவான். அப்படியான சந்தர்ப்பத்தில்- அகால வேளையிற் கூட அவனது தாயார் அவனது பசி வயிற்றை நிரப்ப உணவைக் கொடுத்து விடுவாள். இதனால் இன்று அவன் வெறும் வயிற்றோடு படுக்க முடியாத நிலையில் எழும்பிக் குந்திக் கொண்டான். இன்றைய பொழுதை சிவராத்திரியாகவும், ஏகாதசியாகவுமே கழிக்க வேண்டுமென்ற எண்ணம் உறுத்தவே அவன் எழுந்து வெளியே வந்தான்.

அப்போது, அவன் அந்தக் கோவிலடிக்கு வந்தபோது குரைத்ததேர்முட்டிநாய் மீண்டுதான் அங்கேயிருப்பதை நினைவூட்டிக் குலைத்தது. அந்தச் சப்தத்தை யொன்றும் பொருட்படுத்தாமல் வெளியே வந்தவன் கிணற்றில் தண்ணீரை அள்ளிக் குடித்துவிட்டு சாவகாசமாகத் திரும்பினான்...

கோவிலுக்குக் கிழக்கே... யாரோஒருவர் விரைவாக நடப்பதையும், அவரைத்தொடர்ந்து இன்னொருவர் அந்த வேகத்தில் நடந்து வருவதையும் அவன் கவனித்தான்.

பயங்கரமான இருள் வேளையில் ஒருவர் நடப்பதும் அதைத் தொடர்ந்து வேறொருவர் தொடர்ந்து செல்வதுமான காட்சிகளைத் துப்பறியும் கதைகளிற் படித்துப் பார்த்த அவனுக்கு அந்தக் கதையின் ஒரு அம்சமாக இருப்பதுபோல் அது தென்படவே இதெல்லாம் என்னென்று பிரமிப்புத் தோன்றவே தான் வந்த காரியத்தை மறந்து இரண்டாவது மனிதனைத் தொடர்ந்து பின் சென்றான்.

முதலாவது மனிதனுக்கும் கந்தசாமிக்கும் இடையே இப்போது ஏறத்தாழ முன்னூறு யார் இடைவெளியிருக்கும்.

நேரம் இப்போது ஒன்பது மணிதான் கடந்திருந்தது. நெடுங்கேணியென்ற கிராமம் இந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் தெரியாதபடி உறக்க விட்டத்துக்குள் ஆழ்ந்து விட்டதா?

கோவில் இப்போது பின்னாகி விட்டது. கந்தசாமி ஏற்கெனவே நெடுங்கேணிக்கு நடந்து வந்தபாதையைவிடுத்து முதலாவது மனிதன் தெற்கு நோக்கித் திரும்பினான்.

முன்னுக்குச் செல்லுகின்றவனையோ, அன்றேல் அவனைத் தொடர்ந்து செல்லும் மனிதனையோ ஒருவரையொருவர் திரும்

பிப் பார்க்காததன் காரணத்தால் மூன்றுவதாகச் செல்லுகின்ற கந்தசாமியைப் பற்றிய அக்கறை அவர்களுக்கு இருக்கவில்லை.

எதற்கோ கிளம்பி இங்கு வந்த கந்தசாமி இது என்ன நாடகம் நடக்கிறது என்ற கேள்விக்கு விடை காண பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

ஏறத்தாழ அவர்கள் இப்பொழுது கோவிலிருக்கும் இடத்திலிருந்து மூன்றுவது மைலை அடைந்து விட்டார்கள். வழியிலே கட்டாக்காலி மாடுகள் சில படுத்துக் கிடந்தன.

இருளின் பயங்கரம் சிறிது சிறிதாக இப்பூவுலகில் ஓங்கிவிட்டது. வானத்தில் சாம்பலுக்குள் மின்னும் செந்தணல் துணுக்குகளைப் போல் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன.

இவையெதனையும் முன்னுக்குச் செல்லும் உருவமோ, பின்னுக்குச் செல்பவனோ கவனிக்கவில்லை. ஆனால் இங்கே அதிசயமான ஒருவன் கந்தசாமிதான்.

முன்னுக்குச் செல்பவர்கள் எந்தப் பிரச்சனையில் அடிபட்டுச் செல்லுகின்றார்களென்று அவனுக்குத் தெரியாது. அதைத் தெரிந்திருக்க வேண்டிய நியாயமெதுவும் இருப்பதாகவில்லை.

எதிலும் புதுமையையும், ஆச்சரியகரமான விளைவுகளையும் வரவேற்பதிலும் அவன் இளமை தொடக்கம் பெற்ற பயிற்சிதான் இப்படியான துணிகரமான செயலுக்கு அவனுக்குப் பக்கபலமாகி விட்டதென்று கூற வேண்டும். ஏனிப்படி நடக்கிறார்கள்? என்று அதனை அறியாமல் திரும்புவதில்லை என்ற ஆத்திரத்துடன் நடந்து கொண்டிருந்தான்;

---

கருவிகள் காயப்படுத்தும்;
நூல்கள் குணப்படுத்தும்.

— ஜோஸே மார்ட்டி

நூல் நீர் போன்றது; எம் மட்டத்திற்கும் செல்லும்.

- ரஷ்யப் பழமொழி

---

இப்போது அவர்கள் நடந்து கொண்டிருக்கின்ற பாதைகளில் எந்த விதமான பற்றைகளோ, மரஞ்செடிகளோ இல்லை. இரவின் காரணமாகவுள்ள மறைவைத் தவிர வேறொன்றுமில்லை.

மூவரும் அப்படியே போக்கற்று நடந்து கொண்டிருக்கும் போது, கந்தசாமிக்கு அங்குள்ள பாதைகள் எதுவும் முந்திப் பயிற்சி கிடையாது. அதன் காரணமாக வழியில் உள்ள பள்ளத்தில் தடாலென்று விழுந்து விட்டான். விழுந்தவன் சும்மா விழுந்திருந்தால் இந்தக் கதையில், கந்தசாமியின் தொடர்பு அத்தோடு நின்றிருக்கும்.

'ஐயோ' என்ற சப்தமிட்டபடி அவன் கீழே விழுந்தபோது, முன்னே சென்ற உருவத்துக்கும் கந்தசாமிக்கும் இடையில் வந்து கொண்டிருந்த உருவம் அதுவரை மறைத்து வைத்திருந்த ரோச்வெளிச்சத்தை அடித்துப் பார்த்தது. அங்கே கந்தசாமியை அது கண்டுகொண்டது.

''நீ யாரடா? ஏன் எங்களைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றாய்?'' என்ற சொல்லைக் கேட்டு முன்னே சென்ற உருவமும் அந்த இடத்துக்கு வந்தது.

[தொடரும்]

★★

# கூதற் காற்று

★ கல்முனைப் பூபால்

வாசலிலே
விளக்கொன்று வைத்தேன்;
மணலினிலே
ஆசை மனையாளோடு அருகணைந்து பேசவென்று...!
வாசலிலே வைத்த விளக்கின் 'சிமினி'யினுள்
ஓசைப் புயற்காற்று உட்புகுந்து,...
உட்புகவும் தாசியைப்போல் கண்சிமிட்டி
தன்னடக்கமாகி
என்கூசாத கண்களையும் கூசவைத்து... பின்னர் அது
முன்போல் ஒளிதந்து முற்றுக என்மனைவி
தென்புதரும் கன்னச் சிமிழினைக் காட்டியது!
என்றாலும்,...
வெளியில் பவனத்தில் வீசும் குளிர்காற்று
'சிமினிக்குள்' மீண்டும் செல்கிறது!
சென்றிடவும்,...
குழியாகிச் சுழியாகி குமிண்விட்டு உள்ளார்ந்து
நாணத்திற் குழையும் நங்கையாய்
அவ்விளக்கு
பாணம்போல் ஒளியைப் பரப்பித்தான் நிற்கிறது!
இந்த விளக்கும்
மாலை இருளகன்று
சூரியனின் செந்தழல்கள்
இங்கே தெரிய அணைந்துவிடும்!
இல்லையில்லை...
விளக்கை அணைப்பார்கள் எம்மவர்கள்;
அல்லயலில் உள்ள சிறுவர் அணிதிரண்டு
'சோறு சோறென்று' தாயைத் துழாவுகின்ற
ஓசையும் காற்றின் இடையே ஒலிக்கிறது!
றோட்டில்
முகத்தார் வெறியில் புலம்புவதும்
காற்றிடையே வந்து எம்
கதையைக் கெடுக்கிறது!
கையால் மணலைக் கலைத்து மேடாக்கி
அதில் தையல்
மெல்ல மெல்லத் தமிழில் எழுதுகிறாள்!

காற்றுதரும் கூதல் மனைவி கடுமூச்சின்
முன்னிற்க ஏலாது முடங்கி
விளக்குள்ளே
சண்டை நடத்தத் தயாராகி நிற்கிறது!
இந்த விளக்கு அணைந்தால்
எமது சுகம் கெட்டுவிடும்;
சந்தோச மான கதையும் குறைந்துவிடும்!
ஆக...
இந்த விளக்கு அணைதல் குறை
எனினும்
வேகமாய்க் காற்று வீசி யடிக்கிறது!

# சிந்தனைக்கு....

◁ கெட்ட விஷயங்களைக் கற்றுக் கொள்ள ஒரு நாள் கூட அதிகம்; நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்ளவோ ஆயிரம் நாட்கள் கூடப் போதாது.

◁ உடை புதிதாக இருக்கும்போதே அதைப் பத்திரமாகப் பேண வேண்டும்.

◁ இரவின் முதற் பகுதியில் உன்னுடைய குறைகளைப்பற்றி எண்ணமிடு. இரண்டாவது பகுதியில் மற்றவர்களுடைய குறைகளைப் பற்றி எண்ணமிடு. ஒருவனிடம் உனக்குக் குறைகள் தென்பட்டால் அவற்றைப் பற்றி உரக்கப் பேசாதே. உன்னிடமும் அந்தக் குறைகள் இருக்கின்றனவா என்று நன்ருகச் சிந்தித்துப் பார்.

◁ கார்த்திகேய பூஜை செய்தேன் என்ருல் தாசி வீட்டுக்குப் போனதாக வங்காளிகள் நினைத்துக் கொள்வார்கள்.

◁ உன் விலையுயர்ந்த தொப்பிக்கு அடியில் அதற்குத் தகுந்த தலை இருக்கும் என்று நினைத்தேன்.

◁ விதவையின் வாழ்க்கையோடு ஒப்பிட்டால், வரண்ட தரையில் தவளையின் வாழ்க்கை எவ்வளவோ சுகமானது.

◁ சொந்தமான பீங்கான் கிண்ணத்தைப் பிறத்தியார் அலுமாரியில் வைத்துவிட்டு, வேண்டாத மண் கிண்ணத்தைச் சொந்த வீட்டுக்குக் கொண்டு வருவது எதற்காக?

தொகுப்பு: பீ. கே. ஆர்.

# 100000

நெல்லைதாசன்

"இந்தா சரோ இந்தச் சேட்டுப் பொக்கேற்றுக்கை வைச்ச காசை ஆர் எடுத்தது?" முதல் நாள் காரியாலயத்திலிருந்து வரும்போது கொண்டு வந்து வைத்த ஐம்பது சதக் குற்றியைக் காணாமையால் துள்ளிக் குதித்தான் ராஜன். காலையாகாரம் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்த அவன் மனைவி சரோஜா கணவனது இரைச்சலைக் கேட்டதும் சமையலறைக் கதவைச் சாத்திவிட்டு முகத்தில் வழிந்த வியர்வையை முந்தானையால் துடைத்தவாறு அறையுள் நுழைந்தாள். கணவன் காசைக் காணாது தேடுவதைக் கண்டதும் "சத்தியமா நான் உங்கடை சேட்டுப் பொக்கேற்றுக்கையிருந்து ஒரு சதமும் எடுக்கேல்லை அத்தான்! நீங்கள்தான் கைதடுமாறி எங்கையேன் வைச்சிருப்பியள்" என்றாள். "இதென்ன இந்தச் சேட்டுக்கைதானே பஸ்சுக்குப் போக வேணுமெண்டு வைச்சனான். நீ எடுக்கேல்லையெண்டால் அப்ப ஆர் எடுத்தது? இதை விட வேறு ஒரு சதம் எண்டாலும் இருக்கே?" ராஜனின் இதயமென்னும் எரிமலையிலேற்பட்ட குமுறல் வார்த்தைகளென்னும் தீப் பிளம்பாக வெடித்துச் சிதறியது. நாளை விடிந்தால் புது வருடத் திருநாள். பிள்ளைகளுக்கு உடுப்புகள் எடுக்கவென்றாலென்ன, அல்லது வருடத்துக்கு பொங்குவதற்கு வேண்டிய சாமான்கள் வாங்கவென்றாலென்ன ராஜனிடம் ஒரு சதமேனுமில்லை. தான் வேலை செய்யும் கம்பெனியில் மனேஜரிடம் ஒரு ஐம்பது ரூபா 'அட்வான்ஸ்'சாகக் கேட்டிருந்தான். அதைப்போய் வாங்கி வருவோமென்று புறப்படுகையில் பஸ்சுக்காக வைத்திருந்த ஒரேயொரு ஐம்பது சதக் குற்றியைக் காணவில்லை என்றால் எப்படி இருக்கும்?

அப்போது தான் பக்கத்து வீட்டிற்கு விளையாடப் போயிருந்த அவர்களின் எட்டு வயது நிரம்பிய மகள் கமலா வீட்டினுள் நுழைந்தாள். கமலா வந்தது தான் தாமதம் "என்னடி கமலா! இந்தச் சேட்டுக்கை வைச்ச காசைக் கண்டனீயே?" ஏக காலத்தில் ராஜனும், சரோஜாவும் மகள் மீது கேள்விக் கணை தொடுத்தனர். "எனக்குத் தெரியாதம்மா; மோகனண்ணாதான் சேட்டை எடுத்துப் பார்த்தவர்" என்று தமையன் மீது பழியைச் சுமத்தினாள் கமலா. "எடுக்கிலி அந்தக் கழுதை தான் எடுத்திருக்கும். அவன் சண்முகத்தார் வீட்டாலை வரட்டும் இண்டைக்கு" என்று மகனைத் திட்டிய சரோஜா ஏதோ முடிவுக்கு வந்தவள் போலத் திடீரெனச் சாமியறையுள் நுழைந்து அங்கு பிள்ளையார் கோவில் நேர்த்திக் கடனுக்காகக் காசு சேர்க்கும் உண்டியலைத் திறந்து அதனுள்ளிருந்த சில்லறையை எண்ணிப் பார்த்தாள். ஆக ஒரு ரூபா மூன்றுசதம் மட்டுமே அதனுள் இருந்தது.

மூன்று சதத்தை உண்டியலிற் போட்டுவிட்டு மிகுதி ஒரு ரூபாவை கணவன் ராஜனிடம் கொடுத்து ''இந்தாங்கோ பிள்ளையாருக்கு நேந்து உண்டியல்லை சேர்த்துவைச்ச காசு. பிறகு நீங்கள் காசு கொண்ணந்தோண்ணை ஒரு ரூபாவை எடுத்து உண்டியல்லை போடுவம்'' என்றாள். பதில் பேசாது சில்லறையாக இருந்த ஒரு ரூபாவையும் சேட்டுப் பொக்கற்றினுள் போட்டான் ராஜன். பலவித எண்ணங்களினாலும் அவன் இதயம் கனப்பது போல இப்போது பொக்கற்றும் கனத்தது. அப்போது நேரம் காலை 8-40 என்பதை ஒன்றையொன்று அணைத்தவாறு இருந்த கடிகார முட்கள் ராஜனுக்கு எடுத்துக் காட்டின. 8-45 க்கு வரும் பஸ் வர இன்னும் ஐந்து நிமிடமே இருந்ததால், பஸ்தரிப்பை நோக்கி எட்டி நடக்கத் தொடங்கினான்,

ஒருவாறு பஸ்ஸைப் பிடித்து தனது கம்பெனியை வந்தடைந்தான் ராஜன். 'தாசன் அன்ட் பிறதர்ஸ்' என்ற பெயர் வெளியில் பொறிக்கப் பட்டிருந்தது. மெதுவாகக் கைக்கடிகாரத்தை நோக்கினான். அப்போது நேரம் 9-15 என்பதை எதிரும் புதிருமாக நின்ற கடிகார முட்கள் காட்டின. தயங்கியவாறு கம்பெனியுள் நுழைந்தான் ராஜன். ''ஆ... வாங்க மிஸ்டர் ராஜன்'' என்று வரவேற்ற கம்பனி மனேஜர் ''என்ன இண்டைக்கு லீவு எடுத்திட்டு வந்திருக்கிறீங்க'' என்று பேச்சை இழுத்தார். ''இல்லை சார், நான் புது வருடத்துக்காக ஐம்பது ரூபா 'அட்வான்ஸ்'சாகக் கேட்டிருந்தனெல்லே, அதைத்தான் வேண்டிக் கொண்டு போவமெண்டு.'' வார்த்தைகளை மென்று விழுங்கினான் ராஜன். ''ஐ ஆம் சாரி மிஸ்டர் ராஜன், கைவசம் இப்போ காசு இல்லை. கிடந்தகாசை கொஞ்சம் முந்தித்தான் பக்கத்துக் கடைக்காரருக்குக் கொடுத்தன்'' என்றார் மனேஜர், ''சார் நான் இதைத்தான் நம்பியிருந்தன்'' ராஜனுக்குத் தொண்டை அடைத்தது. ''மிஸ்டர் ராஜன் நீங்கள் மாதம் 150 ரூபா சம்பளம் பெறுகிற சாதாரண கிளார்க். அப்போ உங்க சம்பளத்திலை திட்டமிட்டுச் செலவு செய்யிறது தானே! அதை விட்டுட்டு எல்லாத்துக்கும் கம்பெனியை எதிர்பார்த்தா?'' அறிவுரை என்ற தோரணையில் மனேஜர் குத்திப்பேசியது ராஜனுக்கு எள்ளளவும் பிடிக்கவில்லை. அத்துடன் அங்கு மேலும் நிற்பதில் பிரயோசனமில்லை. என்பதையுணர்ந்த ராஜன், ''சார் நான் போயிட்டு வாறன்'' என்று வேண்டா வெறுப்பாக மனேஜரைப் பார்த்துக் கூறிவிட்டு வெளியே வந்தான். 'அட்வான்சாகப்' பெறும் பணத்தில் புது வருடத்தை 'அட்ஜஸ்ட்' பண்ண நினைத்த ராஜனின் நிலை இப்போது இலவு காத்த கிளி போலாகி விட்டது.

''அத்தான்! போன விஷயம் எப்பிடி? காசு கிடைச்சுதே?'' வீடு திரும்பிய ராஜனை கேள்வியுடன் வரவேற்றாள் சரோஜா. ''எனக்கு வெளிக்கிடேக்கையே தெரியுந் தானே... மனேஜர் காசு இல்லையெண்டிட்டார். அவரைக் காசு கேக்க அவர் கணக்கு வழக்கெல்லே கதைக்கிறார்'' விரக்தியுடன் பதிலிறுத்தான் ராஜன். ''அப்ப இந்த முறை புது வருடத்துக்கு 'சிவசிவா' எண்டு பேசாமலிருப்பம்'' என்று கூறிய சரோஜா வாசற் பக்கம் பார்த்துவிட்டு ''அத்தான் சண்முகத்தாரெல்லே வாறார்.'' என்றாள். பட்டையாக நெற்றியில் திருநீறு துலங்க, பல்லிடுக்கினுள் சுருட்டொன்று புகைந்தவாறு இருக்க' பத்திரிகை ஒன்று கை இடுக்கினுள் முடங்கிக் கிடக்க இத்தியாதி கோலத்துடன் பக்

கத்து வீட்டுச் சண்முகம் படலையைத் திறந்து உள்ளே வந்து கொண்டிருந்தார். ராஜன் எழுந்துநின்று ''வாருங்கோ சண்முகண்ணை'' என்று அவரை வரவேற்றவாறு ''சரோ உந்த வெத்திலைத் தட்டை இஞ்சை கொண்டுவா'' என்றான். ''அதெல்லாமிருக்கட்டும் தம்பி நாளைக்குப் புதுவருடமும் பிறக்கிறது. என்னட்டை ஐஞ்சு சதங் கூடக் கையிலை இல்லை. நீங்களுப்பிடி மூண்டு மாசமாய்க் காசு தராமலிருந்தால்..,'' சற்றுக் கோபத்துடன் பேசினார் சண்முகம். மூண்டு மாத காலமாக வீட்டு வாடகைப்பணம் கொடுக்காதிருந்தால் யாருக்குத்தான் கோபம் வராது. ''இந்த முறை வருடத்துக்குக் கூட என்ன செய்யிறதெண்டு யோசிச்சுக் கொண்டிருக்கிறம். ஏதோ கடவுள் வழிவிட்டால் பாப்பம் வாற மாதத்துக்குள்ளையெண்டாலும் உங்கடை காசைத்தாறம்'' என்றவாறு வெற்றிலைத் தட்டைச் சண்முகத்தாரிடம் கொடுத்தாள் சரோஜா.

சண்முகத்தார் வெற்றிலையைக் குதப்பியவாறு தான் கொண்டுவந்த அன்றைய தினசரியைப் பார்த்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்த மோகன் ''சண்முகண்ணை உதிலை 'சுவீப் டிக்கட்' முடிவுகள் வந்திருக்கே'' என்று ஆவலுடன் கேட்டான். ''மோகன் உனக்கேது சுவீப் டிக்கட்'' ஆச்சரியத்துடன் கேட்டான் ராஜன். ''கோபிக்காதையுங்கோ அப்பா நேற்று நான்தான் உங்கடை சேட்டுக்கையிருந்த ஐம்பது சதத்தை எடுத்து ஒரு சுவீப் டிக்கற் வாங்கினனான்'' என்றான் மோகன். ''இருக்கிற அதிஷ்டத்திலை சுவீப் டிக்கட்டே வேண்டின்னீ கழுதை!'' என்று உறுமியவாறு மகனை அடிக்கச் சென்ற ராஜனை ''பொறு தம்பீ அதுக்கென்ன இஞ்சை டிக்கட்டைக் கொண்டரச் சொல்லு. பரிசு கிடைச்சிருக்கோ எண்டு பேப்பரிலை பாப்பம்'' என்றார் சண்முகம். உடனே மோகன் சுவீப் டிக்கட்டை எடுத்துக் கொண்டு வந்து சண்முகத்தாரிடம் கொடுத்தான் அதைக் கையில் வாங்கி நம்பரைப் பார்த்துவிட்டு பேப்பரில் வந்திருந்த சீட்டிழுப்பு முடிவை நோக்கிய சண்முகத்தார் ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தவாறு ''மோகனுக்கு இந்தமுறை புதுவருடத்துக்கு பெரிய பரிசெல்லே கிடைச்சிருக்கு'' என்றார். ''என்ன சண்முகண்ணை எத்தனையாம் பரிசு விழுந்திருக்கு'' ஏககாலத்தில் எல்லோரும் கேட்டனர். ''தம்பி ராஜன் உங்கடை சுவீப் டிக்கட்டுக்கெல்லே 1ம் பரிசு ரூபா 1,00000 கிடைச்சிருக்கு! நீங்கள் கொழும்புக்குப் போய்த்தானே காசை வேண்டவேணும் இப்ப நான் 500 ரூபா தாறன் புதுவருடத்துக்கெண்டாலென்ன, கைச்சிலவுக்க

உங்களுக்குத் தேவையான
சகல
மருந்து வகைகளுக்கு

எம்மிடம்
விஜயம் செய்யுங்கள்.

**பரணி மருந்துச்சாலை**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி: 7386

டாலென்ன வைச்சுக் கொள்ளுங்கோவன்'' றூல் போட்டுச் சுரு பிடிக்கும் பாணியிற் பேசினார் சண்முகம். ராஜனுக்கு உலகமே தன் காலடியில் வந்து விட்டது போன்ற மகிழ்ச்சியேற் பட்டது. மோகனே மகிழ்ச்சி மிகுதியினாற் துள்ளிக் குதித்தான்.

அடுத்தநாள் புதுவருட தினத்தில் மோகனும், கமலாவும் புத்தாடைகள் அணிந்தவாறு 'பட்படார்' என்று வெடிகளைக் கொளுத்திக் கொண்டிருந்தார்கள். சரோஜா தன் வெண்ணிற மேனியில் புதிய செந்நிறச் சேலை உடுத்தவாறு சூரிய பகவானுக்குப் பொங்கிக் கொண்டிருந்தாள். குதூகலத்துடன் ராஜன் தனது பட்டு வேட்டியை மடித்துக் கட்டியவாறு ''என்ன சரோ இப்ப சந்தோசம் தானே! குடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுக் கொண்டு கொடுக்குமென்பினம் எங்களுக்கு மோகனெடுத்த சுவீப் டிக்கட் 1,00000 ரூபாவைப் புத்தாண்டுப் பரிசாக தேடித் தந்திருக்கிறது.'' மகிழ்ச்சி ததும்ப மனைவியைப் பார்த்துக் கூறிய ராஜன், சிறிது பொங்கலையெடுத்து வாயிற் போட்டான். அது வழமையைவிடச் சற்று அதிகமாக இனிப்பது போலிருந்தது.

★



இலங்கைக்கு இன்றுவரை மூன்று கப்பல்கள் சொந்தமாக உள்ளன. முதலாவது கப்பலின் பெயர், லங்கா ராணி. இரண்டாவது கப்பல் எம். பி. லங்கா சகாரிக்கா ஆகும். மூன்றுவதற்கு லங்காதேவி எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவற்றைவிட இலங்கை-சீன கூட்டுக் கப்பல் சேவைத் திட்டத்தின் கீழ் இரண்டு கப்பல்களை இலங்கைக்கு நீண்டகாலக் கடனில் சீனா வழங்கவிருக்கிறது. இந்த இரு கப்பல்களை வாங்கியதும் இலங்கைக்கு ஐந்து கப்பல்கள் சொந்தமாகிவிடும்.

## சினிமாப் போட்டி விடைகள்:

1. எம். ஜி. இராமச்சந்திரன்
2. சிவாஜிகணேசன்
3. முத்துராமன்
4. எஸ். பாலசந்தர்
5. எஸ். எஸ். இராஜேந்திரன்
6. தேவிகா
7, காஞ்சனா
8. விஜயகுமாரி

பரிசீலனைக் கட்டத்திலிருக்கும் விடைகளின் முடிவுகள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

தவிர்க்க முடியாத காரணத்தினால்

## "இதயக் கோவிலில்..."

தொடர்கதை இவ்விதழில் வெளிவரவில்லை.

அடுத்த இதழிலிருந்து வழமைபோல வெளிவரும்.

# இலந்தைப் பழத்துப் புழுக்கள்!

அன்புடன்

தார் ரோட்டு
தபாற் கந்தோர்
ஆஸ்பத்திரி
மகா வித்தியாலயம்

கார் வண்டி
கல் வீடு
உழவு மெசின்
மின்சாரம்

நான் ஊரைப் பிரிந்த..
இருபது வருடங்களுக்குள்ளே—
எத்தனை மாற்றங்கள்
எத்தனை முன்னேற்றங்கள்
ஓமோம்...!
ஊர்... முன்னேறி விட்டது !

அதோ தூரத்தே...
அணி செய்து வருகி(ன்)ருன் ஆதம்...
ஆம் !
அவனும், நானும் பள்ளி நண்பர்கள்
''ஹலோ மச்சான் ஆதம்...''
''................''
ஏன் அவன் பேசவில்லை
அம்மா சொன்னவைகள் மெய்தானே..?

காணி.. பூமி... சொத்து சுகம்...
இவைகளை அவன் வாங்கி விட்டானு...?
அவைகள் அவனை வாங்கி விட்டனவா?

தார் ரோட்டு
தபாற் கந்தோர்
கார் வண்டி
மின்சாரம்
அப்பப்பா...!
ஊர்... முன்னேறி விட்டது!

ஊரிலுள்ள மனிதர்கள்...?
போட்டி
பொருமை
பூசல்
புகைச்சல்
இவைகள் இன்னும் மாறவே இல்லை!

தார் ரோட்டு
தபாற் கந்தோர்
கார் வண்டி
மின்சாரம்
அப்பப்பா...!
எத்தனை மாற்றங்கள்
எத்தனை முன்னேற்றங்கள்
ஓமோம் !
ஊர்... முன்னேறி விட்டது !

# தென்னகத்தில் ஒரு திங்கள்

சைவப்புலவர், கதிர் தணிகாசலம்

2

## சோழ வள நாடு சோறுடைத்து

திருச்சி விமான நிலையத்தில் இறங்கினாலும், எனது மனம் சோழ நாட்டின் பெருமைகளை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. சோழ வள நாட்டின் அழகே அழகு. வான் பொய்பினும் தான் பொய்யாக் காவிரி, பொன்னியென்று புகழுடன் அழைக்கப்படும் காவிரியும், அதன் கிளையான கொள்ளிடமும் விமானம் கீழே இறங்குவதற்குப் பதிவாக வரும்போது, நன்றாகத் தெரிந்தன. முதலில் தொண்டை நாட்டைக் கடந்தே சோழநாடு போகிறோம். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கவே செய்கின்றது. தொண்டை நாடு வரட்சியானது. சோழ நாடு வளமுடையது. தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் எனப் புகழப்படும் தஞ்சாவூர் மாவட்டம் சோழ நாட்டில் தான் உள்ளது. விமானம் கீழே போய்க் கொண்டிருக்கும்போதே காவிரியாறும், உச்சி மலைப் பிள்ளையார் கோவிலும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. இந்த அழியாத நினைப்பில் இந்திய மண்ணில் கால் வைக்கிறோம்.

## சுங்கப் பகுதியினரின் சிறைச்சாலை :

இந்தியத் தரையில் இறங்கியதும், நேரே சுங்கப் பகுதியினரின் பெரிய அறைக்குப் போகிறோம். அங்கே நிரப்ப வேண்டிய பத்திரங்களை நிரப்பிக் கொடுக்க அரை மணி நேரமாவது ஆகும். பின்னர் விமானத்திலிருந்து எங்கள் பெட்டிகள், பார்சல்கள், வந்ததும் பாஸ் போட்டுகளை வைத்துக் கொண்டு பிரயாணிகளைக் கூப்பிட்டுப் பெட்டிகளைத் திறக்கச் செய்து சோதனை போடுவர். தேங்காயெண்ணெ ரின் ஒவ்வொன்றுக்கும் ரூ. 6/= வரி போட்டார்கள். ஆனால் இந்த வரியை இந்திய நாணயமாகவே கட்ட வேண்டும். எப்படி? திருச்சி விமான நிலையத்தில் உத்தரவு பெற்ற பணம் மாற்றுபவர் ஒருவர் இருந்தார். ஆனால் அவர் அதில் பணம் மாற்றமாட்டார். எமது பாஸ் போட் நம்பரையும் குறித்து வைத்துப் பணம் தருவார். அதுவும் ஏதாவது சில்லறைக்கு மட்டுமே. அவ்வாறே இங்கே (சிலோன்) காசு 20/– கொடுத்து ரூ. 14/– பெற்றுக் கொண்டேன். எனது நண்பரின் நண்பரொருவர் விமான நிலையத்துக்கு வந்திருந்தார். அவர் மூலமாகத் திருச்சி நகருக்குப் போனதும் திருப்பித் தருவதாகச் சொல்லி கடனாகப் பெற்று வரி கட்டிச் சுங்க அறையிலிருந்து வெளியே வந்தோம். இலஞ்சம் என்பது பலவகை. நாட்டுக்கு நாடு விதம்விதமாகச் செய்வர். திருச்சி விமான நிலையம் இதற்கு விலக்காகி விடுமா? இலங்கையிலிருந்து இந்திய மண்ணில் கால் வைக்க 40 நிமிடங்களாகும். ஆனால் விமான நிலையத்தின் சுங்கப் பகுதியினரிடமிருந்து விடுபட்டுத் திருச்சி நகரத்துக்குப் போக 2 மணி நேரமாகியது. விமான நிலையத்திலிருந்து 'ஏயர் சிலோன்' கந்தோர் ஆறே மைல்

தான். இத் தூரத்தைப் பத்தே நிமிடங்களில் கடக்கலாம். ஆனால் சுங்கச் சாவடி தான் ஒரு. சிறைச்சாலை.

## ஆயில் ரின் தரீங்களா?

சுங்கச் சாவடியிலிருந்து வெளியே வந்ததும் வியாபார நடுவர்கள் வந்து ''ஆயில் ரின் தரீங்களா? சோப்பு தரீங்களா? ஸார், வேறென்ன கொண்ணுந் தீங்க?'' என்று குசலம் விசாரித் தனர். என்னுடன் வந்த எனது மனைவி உங்களுக்கு இவர்களெல் லாம் நல்ல பழக்கமானவர்களா என்று கேட்டு வைத்தாள். இந்தி யாவில் எமக்குப் பழக்கமானவர் கள் இவ்வளவு பேர் இருந்தால் பயமேன் என்ற நினைப்பில், எங் கள் வரவை முன்கூட்டியே அறி ந்து எதிர் பார்த்துக் கொண்டி ருப்பவர்கள் போல் அவ்வளவு அன்னியோன்னியமாகக் கேட் டனர். இவர்களுக்குப் பதில் சொல்லித் தப்புவதற்கு வெகு நேரமெடுத்தது. இவர்கள் கண் ணுக்கு பிரயாணிகள்; யாவரும் கள்வரே! விமான நிலையத்துக் கும், நகருக்குமிடையில் பஸ் சேவை கிடையாது. தனிப்பட் டோரின் வண்டிகளையே அவர் கள் அமர்த்தித் தருவர். நகருக் குப் போன வண்டி திரும்பிவரும் வரை காத்திருந்தோம். வண்டி வந்தது. நாங்களும் வேறு சில ரும் ஏறிக் கொண்டோம். அசோக் பவன் விடுதிக்குப் பக்க லில் 'ஏயர் சிலோன்' கந்தோர் உள்ளது. விமான நிலையத்திலி ருந்து திருச்சி நகருக்குப் போகும் வழி ஏகாந்த வழி. மனிதனைக் காண்பது அபூர்வம். இந்தியா ஜனத்தொகை பெருகிய நாடு என்பார்களே; இதென்ன ஒரு ஆளைக் கூடக் காண முடியவில் லையே என்று எண்ணத் தோன் றும். அவ்வளவு வெறுமையான வழி. ஆனால் நகருக்குள் நுழைந் ததும் நாம் எவ்வளவு தவறான கணக்குப் போட்டு விட்டோம் என்பது புலனாகும். எங்கும் ஒரே ஜனக் கூட்டம்; ஒரே நெரிசல்; எங்கும் மனிதத் தலைகள் தான்.

நான் இந்தியாவுக்கு 1958ம் ஆண்டும் சென்றிருந்தேன். அப் பொழுது இருந்த திருச்சிக்கும் இன்று இருக்கும் திருச்சிக்கும் வெகு வித்தியாசம் இருக்கிறது. அந்த நகரமே இந்தப் 14 வரு டங்களில் எவ்வளவு உருமாறி யுள்ளது தெரியுமா? அன்றைய ரயில் நிலையத்துக்கும், அசோக் பவானுக்கும் இடையில் இரண் டொரு கடைகளும் சில தெரு வோர அங்காடி வியாபாரிகளும் காணப் பட்டார்கள். ஆனால் இன்றோ எத்தனை கடைகள்? எத் தனை ஓட்டல்கள்? என்னவெல் லாமோ உருவாகி இருந்தன. எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந் தது. இவ்வளவு குறுகிய காலத் தில் இவ்வளவு மாற்றத்தை எமது நாட்டில் நாம் காண முடி யாது.

## எங்கும் பூவும், பழமும்:

தெருவோரமெங்கும் சிறு கூடாரங்கள், பெட்டிகள் அருக ருகே சிறு சிறு தள்ளு வண்டிகள் இவையெல்லாம் நிறைய அன்ற லர்ந்த மலர்க் கொத்துக்கள், பூச்சரங்கள், மாலைகள்; சிறிய வர், பெரியவர், பெண்கள் எல் லோரும் ஈடுபடும் வியாபாரம் இது. இன்னொரு புறம் பழங்கள் கண்ணுக்கினிய கண்கொள்ளாக் காட்சி. எங்கள் நாட்டில் தேடி னாலும் கிடைக்காது. மஞ்சள் நிறமான அழகான தோடம் பழங்கள், சிறிய சாத்துக்குடிகள் வகை வகை வாழைப் பழங்கள், பச்சை, சிவப்பு அப்பிள் பழங் கள், கொத்துக் கொத்தாக முந் திரிப் பழங்கள். பார்க்கவே நாவூறும். இலங்கையிலிருந்து போவோருக்குஇதுவே போதும். எந்தப் பெண் கூந்தலிலும் பூவும், சரமும் இருக்கும். மணமானவர் கள் நெற்றியில் குங்குமம் துலங் கும். விதவைகள் பூவும், பொட்

டும் இடமட்டாடார்கள்.

## ரூபா - பைசா அல்லது காசு சில்லறைப் பதுக்கல்:

நாணயத்தில் எமது நாட்டைப்போலவே நூறு பைசாக்கள் ஒரு ரூபாயாகும். எமது சதம் அவர்களது பைசா. காசு என்றும் சொல்வர். 50 பைசா, 25 பைசா, 20 பைசா, 10 பைசா, 5 பைசா, 3 பைசா, 2 பைசா, 1 பைசா காசுகள் உலோகத்தில் உள. 1 ரூபாவுக்குக் கடதாசிக் காசும் (நோட்டு) உலோகக் காசும் உள. அதே போல மற்ற நோட்டுகளும் எமது நாட்டில் உள்ளதுபோல உண்டு. ஆனால் இந்தியாவில் எப்போதுமே சில்லறைக்குத் தட்டுப்பாடு. அவர்களுக்கு நோட்டிலும் பார்க்க உலோகத்தில் நம்பிக்கை. பெரிய வியாபாரிகளும், அங்காடி வியாபாரிகளும் சில்லறையைப் பதுக்கித்தான் வைப்பதுண்டு. ரூபாய்களைச் சில்லறையாக்குவது வெகு சிரமம். பஸ் கண்டக்டர்களும் சில்லறையாகக் கொடுக்காவிடில் நல்ல 'பாட்டு'க் கொடுப்பர். இதனால் நாங்களும் போகுமிடமெல்லாம் சில்லறையைப் பத்திரமாகப் பாவித்து வந்தோம்.

## பேருந்து வண்டிகளில் (பஸ்) பெண்களுக்குத் தனியிடம்:

தென்னகத்தில் ஏறத்தாழ எல்லா இடங்களிலும் [சென்னை நகர் தவிர்ந்த] பெண்களுக்குத் தனியிடம் ஒதுக்கியுள்ளனர். எந்த வண்டியிலும் பெண்கள் நிற்க ஆண்கள் இருக்க மாட்டார்கள். பெண்களுக்கு உட்கார இடம் கொடுப்பார்கள். அத்துடன் பெண்கள் இருந்தால் அந்த ஆசனங்களில் ஆண்கள் கள் இருக்கமாட்டார்கள். சென்னை நகரில் மட்டும் இந்த நடைமுறை கவனிக்கப்படுவதில்லை.

## பேருந்து வண்டிகளில் திருக்குறள் அட்டைகள்

அரசாங்க வண்டிகளில் ''தமிழ்நாடு அரசு போக்குவரத்து'' எனத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. அவை போகும் இடங்களின் பெயர்களும், எந்த ஊர்களின் ஊடாகப் போகும் எனவும் விளக்கமாக போட் பலகைகள் குறிக்கும். ஒவ்வொரு அரசு பஸ்ஸிலும் திருக்குறள் எழுதப்பட்ட அட்டைகள் உள்ளே கண்ணுடி 'பிறேம்' போட்டுத் தொங்க விடப்பட்டிருக்கும். சாரதி தொடக்கம் பிரயாணிகள் வரை யாவரும் பார்க்கக் கூடியதாக இது இருக்கும். தி.மு.க. ஆட்சியினரை குறிப்பாக கலாநிதியும், கலைஞருமான மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்களையே இந்த நல்ல காரியம் சாரும். கல்வியறிவுள்ளவர்கள் யாவரும் மெச்சும் செய்கையாகும்.

அரசு வண்டிகளைத் தவிர தனியாரும் வேறு கம்பெனிகளும் நடத்தும் பஸ்களும் இருக்கின்றன. தூர இடங்களுக்குப் போகும் வண்டிகளில் ஆசனங்களைப் பதிவு (ரிசேர்வ்) செய்து கொள்ளலாம். ஆனால் எமது நாட்டிலும் பார்க்க தென்னகத்து பஸ் கட்டணம், ரயில் கட்டணம் மிக உயர்வானது. எங்களுக்கு இங்கே பிரயாணத்துக்கு ஒரு மைலுக்கு 4 சதம் கொடுப்பதானால் அங்கே 6 அல்லது 7 பைசா கொடுக்க வேண்டும். அத்துடன் யாத்திரிகர் வரி என்ற ஒன்று ரயிலுக்கு உண்டு. பஸ் பிரயாணம் ரயில் பிரயாணத்திலும் பார்க்கச் செலவு குறைவாயுள்ளது.

[தொடரும்]



# பெண்மை

பெண்மை! ஆகா! எவ்வளவு இனிய சொல்! எங்கே காணலாம் இந்தப் பெண்மையை? ஆணுக்கு அடங்கி, அவனுக்கு அனுசரணையாக இல்லறம் நடத்துபவர்களிடம் தானா? இல்லை, இல்லை; ஆண்மையின் முரட்டுச் சுபாவத்தைப் போக்கி, அதில் பரிவு என்னும் பயிர் வளர உதவுகிறவளே, பெண்மையின் பூஷணம்.

ஆங்கிலக்கவி, ஷேக்ஸ்பியர்

வில்லுக்கு நாணைப்போல், ஆணுக்குப் பெண் அமைந்திருக்கிறாள். அவள் அவனை வளைக்கிறாள்; என்றாலும் அவனுக்குக் கீழ்ப்படிகிறாள். அவள் அவனை இழுக்கிறாள்; என்றாலும் அவனைப் பின்பற்றுகிறாள். ஒன்றில்லாமல் ஒன்றினால் பயனில்லை.

ஆங்கிலக்கவி, வோர்ட்ஸ்வொர்த்

பெண்மையில் தெய்வத் தன்மை இசைந்து நிற்கின்றது. கொந்தளிக்கும் வாழ்க்கைப் புயலுக்கிடையே மனோ திடத்தை அளிப்பதற்குரிய சஞ்சீவி பெண்மைக் கோலத்தில் இருக்கின்றது. பெண்மை இல்லாவிட்டால் உலகத்திலுள்ள வேகத்திற்குச் சமாதானமில்லை. வீரத்திற்கு வெற்றியின்பமில்லை.

கி. வா. ஜகநாதன்

நாண வேண்டியதற்குத்தான் நாண வேண்டுமே தவிர, நாணத் தேவையற்றவைக்கு நாண வேண்டியதில்லை. வெட்கப்படத் தேவையில்லாததற்கு வெட்கப்படுகிறவள் வெட்கப்பட வேண்டியவைக்கு வெட்கப்படமாட்டாள்.

பெரிக்வீல்

பெண்ணின் நிலை உயரும்போது ஆணின் நிலையும் உயரும். ஒவ்வொருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையும் உயர்வடையும்.

காந்தியடிகள்

*Space Donated by:*

**SIVA CRUSHER**

URUMPIRAI.

# எலிப்பொறி

— பாலமுனை ஆதம்

உற்றார் உறவினரில்லாத பிச்சை எடுத்து வாழும் கிழவியின் குடிசை அது. எப்படியோ இக் குடிசையில் குடிகொண்டது சுண்டெலி ஒன்று.

கிழவி ஊருக்குளுள்ள ஒவ்வொரு வீடாகச் சென்று பிச்சை எடுத்து வந்து, தள்ளாடி நடந்த களைப்பில் பிச்சைப் பொருட்களைப் பெட்டியிலேயே வைத்துவிட்டுத் தூங்கி விடுவாள். பிச்சைப் பொருட்களை அச் சுண்டெலி சாப்பிட்டு விடும். கிழவி எழுந்து பெட்டியைப் பார்த்தால் அதற்குள்ளிருந்த பழம், அரிசி, நெல் அனைத்தும் இல்லாமலே இருக்கும். கிழவி துக்கப்பட்டு விடிந்ததும் அப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு பிச்சையெடுக்கக் கிளம்பிவிடுவாள்.

கிழவி பிச்சை எடுத்து வந்த பொருட்களை சிறந்த முறையில் மூடிவிட்டுத் தூங்கிவிட்டாள். பெட்டியைக் கண்ட சுண்டெலி ஓடிவந்தது. எலி கிழவியின் பிச்சைப் பொருட்களைச் சாப்பிடுவது பொருளிருக்கும் பெட்டிக்கும் கோபமாகவே இருந்தது.

அன்று ஓடிவந்த எலியைக்கண்ட பெட்டி, ''வராதே நில்! அநியாயம்! ஏழையின் பொருளில் கை வைப்பது...'' பெட்டி சொல்லி முடியவில்லை. ''டேய்! யாருடா நீ? நான் உண்பேன்! ஓடி ஒழிப்பேன்! எனக்குப் புத்தி சொல்லத் தேவையில்லை நீ போடா!'' எலி பெட்டியின் பேச்சை இடைமறித்துக் கூறியது.

''உனக்கு என்ன தெரியும்டா தம்பி. இக் கிழவி தள்ளாடித் தள்ளாடி ஒரு சாண் வயிற்றுக்காக எரிக்கும் வெய்யிலில் அங்கும் இங்கும் திரிந்து எடுத்து வரும் பொருட்களைச் சிறிதும் கூசாமல் திருடிச் சாப்பிடுகின்றாயே! கிழவி படும் பாடு எனக்குத்தான் தெரியும். இப்படிச் சாப்பிடுவது தகுமா? இனிமேலாவது திருடிச் சாப்பிடாமல் போ'' பெட்டி பரிதாபத் தோறணையில் எலிக்குச் சொன்னது.

''பெட்டியாரே! எனக்குப் புத்தி சொல்ல முன்வராதே! நீ கிழவியின் கைக்குள் அகப்பட்டு அது உத்தரவுப்படி நடக்கிறாய்! நான் அப்படியா? ஒன்றும் செய்யாமல், சிறிதும் உழைக்காமல் இருந்தவிடம் இருந்து சாப்பிட்டதனாற்றான் இவ்விதம் பருமனாக இருக்கின்றேன். எனது வேலை, எனது வர்க்கத்தினது வேலை உறிஞ்சி வாழ்வதுதான். எனவே நீ எதுதான் சொன்னாலும் நான் கேட்கப் போவதில்லை'' அகங்காரத்துடன் எலி பெட்டியினுள் பாய்ந்து வழமை போல் சாப்பிட்டுவிட்டு ஓடி ஒழிந்து கொண்டது.

கிழவி பெட்டியைப் பார்த்தாள். பழைய படிதான் பெட்டி காட்சியளித்தது.

மறுதினம் கிழவி பக்கத்து வீட்டுக்குச் சென்று எலிப்பொறி வாங்கி வந்து பெட்டியின்

பக்கத்தில் வைத்துவிட்டாள். பெட்டி; எலி கூறிய அனைத்தையும் எலிப்பொறியிடம் சொன்னது. பொறிக்குக் கோபம் உண்டாகி, ''நண்பா நீ பயப்படாதே! ஏழையின் பொருட்களைச் சுரண்டும் சுண்டெலியை இன்றே தொலைத்து விடுகிறேன். சிறிதும் வேலை செய்யாமல் இருந்து சாப்பிடுபவர் இன்னும் சொற்ப நேரத்திற்குள் இறந்து விடுவார் பார். இப்படி வாழும் இந்த எலியாரைப் போன்ற அனைவரையும் தொலைப்பதுதான் சிறந்தது', வாய்க்கு வந்த விதமாகப் பேசி மௌனமாகியது எலிப்பொறி.

பெட்டியைக் கண்ட எலி மகிழ்ச்சியுடன், பெட்டியை அண்டியது. பொறியில் வைக்கப் பட்டிருக்கும் சுட்ட இறைச்சி மூக்கைத் துளைக்க இறைச்சியைக் கௌவியது. ''உறிஞ்சற் பேர் வழியே வா!'' சொன்னபடியே பொறி எலியை அமத்திக்கொண்டது. எலியால் ஒன்றும் செய்யவோ, பேசவோ முடியவில்லை, எலி இறந்து விட்டது.

''நண்பா! எனது வேலை முடிந்துவிட்டது. இனிமேலாவது மகிழ்ச்சியாய் இரு'' பொறி பெட்டியிடம் சொல்லிவிட்டு விடை பெற்றது. பெட்டி மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தது.

பொறியை வந்து பார்த்த கிழவி ''என்ர பொருளைத் திண்டு கொழுத்த எலியே, இனித்தான் எனக்கு நிம்மதி'' என்று சொல்லியவாறே பொறியிலிருந்தும் எலியைக் கழற்றி வெளியே வீச, காகம் தூக்கிக்கொண்டு எங்கோ பறந்தது.

## இதனைக் கண்டுபிடித்தவரைத்



## தெரியுமா?

புரட்டுங்கள் மறுபக்கம்



# இவர்தான்

புதிது புதிதாகக் கருவிகள் கண்டு குவித்த அமெரிக்க மேதை இவர். 1847ல் ஓ ஹையோ மாநிலத்தில் பிறந்த தாமஸ் எடிசன்தான் அவர் என்பது இப்பொழுது தெரிகிறதா? இளமையில் இவர் தந்தி அடிப்பவராக வேலை செய்தார். தாமாக முயன்று மின்விசை, இரசாயனம் படித்துக்கொண்டார். தந்தி முறைக்கு உதவும் பல கருவிகள் செய்து விற்றுப் பணம் தேடி, நியூ ஜெர்ஸி மாநிலத்தில் தமக்கென ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை அமைத்துக் கொண்டார். தந்தி, டெலிபோன், டைனமோ இவற்றையெல்லாம் செம்மைப் படுத்துவதற்கு இவர் பல வழிகளைக் கண்டார். 1931ல் தாம் இறக்கும்போது ஆயிரத்துக்கு மேற்பட்ட புதுச் சாதனங்களுக்கு இவர் உரிமைப் பதிவு பெற்றிருந்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் இவரது திறமையை.

அனுப்பியவர்: இ. புண்ணியமூர்த்தி

## ★ இரத்தக் கை!

இந்த வித்தையைச் செய்ய உங்களுக்கு ஏறக்குறைய ஓர் அடிச் சதுரமான பருத்தித் துணி தேவை. இதனைச் சோடியம் சலிசிலேற் கரைசலில் நனைத்து உலர்ந்தவுடன் ஒரு மரப் பலகையின் மீது விரித்து வைத்துவிடுங்கள். துணி வெள்ளை வெளேர் என்று இருக்கட்டும். (சோடியம் சலிசிலேற்றுக் கரைசலும் நிறமற்றதாகையால் நனைத்துலர்ந்த துணி வெள்ளையாகவே இருக்கும்.) ஒரு கண்ணுடி பேஸின் நிறைய அமோனியம் சலீபேற்றுக் கரைசல் தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள். இக் கரைசலும் நிறமற்றதாகையால் சாதாரண நீர் போலவே தோன்றும். வித்தையை ஆரம்பிக்கு முன்னர் ''ஏமாற்று எதுவுமில்லை, பெருமக்களே!'' என்று குட்டி லெக்சர் அடித்துவிட்டு உங்கள் கைகளைப் பேசினுள் தோய்த் தெடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் உங்கள் கைகளை வெள்ளைத் துணிமீது (ஏற்கனவே தயாராக்கப்பட்டது) சில நிமிடங்களுக்கு அழுத்தி வைத்துவிட்டு எடுக்கும்போது வெள்ளைத் துணியில் இரத்த வர்ணத்தில் உங்கள் கையின் அடையாளம் இருப்பதைக் கண்டு பார்வையாளர்கள் நிச்சயம் வாயைப் பிளப்பார்கள்!

## கல்வி, கலை, கலாச்சாரக் காப்புக் கழகம்

எடுக்கும்

# பாரதி விழா.

கல்வி, கலை, கலாச்சாரக் காப்புக் கழகத்தின் இணைப்புக் கூட்டம் நல்லூர், ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் 19–3–72 அன்று மோன வணக்கத்துடனும், தமிழ் வாழ்த்துடனும் தொடங்கியது. மேற்படி கூட்டத்தில் வடக்கு, கிழக்கு, மலைநாடு (நாவலப்பிட்டியா) முதலிய மாவட்டங்களிலிருந்து பல மன்றங்களினதும், சங்கங்களினதும் நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கழகத் தலைவரும், வழக்குரைஞருமான திரு, சி. நாகராசா அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், தமிழினத்தின் கல்வி, கலை, கலாச்சாரப் பண்பாடுகள் அனைத்தும் அழித்தொழிக்கப்படும் இக் காலத்தில் இப்படிப்பட்ட ஒருமைப்பாட்டுச் சக்தி எமக்கு இன்றியமையாத ஒன்ருக இருக்கிறது என்றும், இவ்விதம் நாம் ஒன்றுபட்டுச் செயற்படுவோமாயின் எமது உரிமைகளை எளிதாகவும், விரைவாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார்.

12-3-72ல் நடந்த செயற்குழுக் கூட்டத்தில், சித்திரை மாதம் நடத்த இருந்த பாரதி விழா எதிர்வரும் ஆவணித் திங்கள் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி விழாவை ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்னும் மகாகவி பாரதியின் பாடல் தலைப்பில் மூன்று நாள் பெருவிழாவாக யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதென்றும்; இசையரங்கு, கவியரங்கு, உரையரங்கு, நாடக அரங்கு எனப் பகுத்து நடாத்துவதோடு சித்திர, சிற்ப, கைப்பணிப் பொருட் கண்காட்சியையும் வெகுசிறப்பாக நடாத்த முயற்சிகள் நடைபெற்று வருவதாகக் கழகச் செயலாளர் திரு. ச. பெனடிக்ற் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் தமிழ் வளர்த்த பெரியோரின் உருவம் தாங்கிய அலங்கார இரத பவனிகளும் இடம்பெற இருப்பது அதன் முக்கிய அம்சமாகஇருக்குமென்ருர் அவர்.

உயரிய தரத்தில்

ஆகஸ்ட் மாத ஒளி நல்லைநகர் சிறப்பிதழாக

உருவாகவிருக்கிறது.

இப்பொழுதிலிருந்தே ஆராய்ச்சிக் கட்டுரைகள், பொருத்தமான புகைப்படங்கள், துணுக்குகள் முதலியவற்றை அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.

ஆசிரியர்: ''ஒளி'' 38, பீ. எஸ். லேன், யாழ்ப்பாணம்.

# அலின்ஸ் ரெயிலரிங் மார்ட்


சகலவிதமான ஆண், பெண் இருபாலாருக்கான
உடை வகைகள்

கவர்ச்சியாகவும் ✶ புதுமையாகவும்
தைத்துக் கொடுப்பதுடன்

## றெடிமெட் வகைகளையும் சிறந்த ரகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**இன்றே விஜயம் செய்யுங்கள்.**

**ALINS** பிரதான வீதி,
பருத்தித்துறை.

பொலிகண்டி, திரு, சு. செல்லச்சாமி அவர்களுக்கும் மயிலிட்டி, சோமசுந்தரம் அவர்களின் புத்திரி சௌபாக்கியவதி, கனகராணிக்கும் 20-3-72 அன்று செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது,

**வாழ்க மணமக்கள்!**


''ஒளி'' 38, பீ. எஸ். லேன், யாழ்ப்பாணம் நிறுவனத்திற்காக நல்லூர், கன்னன் அச்சகத்தில் அச்சிட்டு, எம். எல். லாபீர் அவர்களால் வெளியிடப்பட்டது,
ஆசிரியர்: எஸ். பஞ்சரத்தினம் மே 1972

யாழ்-ராணி சினிமாவில்

பார்த்து மகிழுங்கள்!

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, பாலாஜி

சுந்தரராஜன், பண்டரிபாய்

முதலியோர் நடித்த


துப்பறியும் சித்திரம்

சுஜாதாசினி ஆட்ஸ் அளிக்கும்

★ ராஜா ★

(ஈஸ்மென் வர்ணம்)

# உங்கள் அபிமானமிக்க
# பிளவ்ஸ் ஸ்தாபனத்தின்
# உள்ளங்கவர்ந்த உன்னத
தயாரிப்பு
# ஐஸ் ஜொலி



உங்களது
உள்ளத்தில் என்றும்
இடம்பெறத்தக்கது

***பிளவ்ஸ் ஐஸ் ஜொலியே.***

பிளவ்ஸ் தயாரிப்பெல்ஃருலே சிறுவர்களுக்கு அலாதிப் பிரியம்

**பிளவ்ஸ் இறீம் கவுஸ்**

*ஐந்து சந்தி,*
*யாழ்ப்பாணம்.*

**-/25**